பக்கங்கள்: பன்னிரண்டு

gistered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 15 செவ்வாய்க்கிழமை (27-04-2004) தொலைபேசி - 2223378 ஒலி 130

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.

# இனந்தெரியாதோர் துப்பாக்கிச் சூடு விடுதலைப் புலிகள் ஏழு பேர் வீரச்சாவு!

(மட்டக்களப்பு நிருபர்)

**மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வவுணதீவு இராணுவ முகாம் ஊடாக ஊடுருவிய இனந்தெரியாத துப்பாக்கி நபர்கள் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட இரு வேறு தாக்குதல் சம்பவங்களில் ஏழு விடுதலைப்புலிப் போராளிகள் வீரச்சாவு அடைந்துள்ளனர்.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற ஆயித்தியமலை பிரதான வீதியில் வவுணதீவு படைமுகாமில் இருந்து 8கி.மீ. தூரத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் முள்ளாமுனைப் பண்ணையின் மீது இனந்தெரியாத துப்பாக்கி நபர்களால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது தாக்குதலில் அங்கவீனமுற்ற நாலு போராளிகள் வீரச்சாவை தழுவிக் கொண்டார்கள். அங்குகாவற் கடமையில் இருந்த இரண்டு காவலர்கள் தப்பியோடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலின் போது பண்ணை முகாமில் இருந்த 10 உழவு இயந்திரங்களும், 3 மோட்டார் சைக்கிள்களும், சூடு மிதிக்கும் இயந்திரம் மற்றும் அருவி வெட்டும் இயந்தி

(12-ம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவடைந்த ஏழு போராளிகள் விபரம்

(கிளிநொச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வீரச்சாவடைந்த ஏழு போராளிகளின் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவ் விபரம் வருமாறு, முள்ளாமுனை புலிகளின் வேளாண்மை பண்ணையின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அங்கவீனர்களான கப்டன் சிசில்குமார், கப்டன் வாமகாந்த், லெப் விநோதன், 2வது லெப். தாரணன் ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்தனர். முள்ளாமுனையில் உள்ள புலிகளின் காவல் நிலையும் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது கப்டன் தியானேஸ்வரன் (நடராசா சுரேஸ்-சவுக்கடி), லெப். தனுசன் (செல்லத்துரை யசிகரன் மாவடிச் சேனை), 2ம் லெப். செல்வவீரன் (சேதுநாதபிள்ளை பிரதீபன்-சித்தாண்டி) ஆகிய போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

இம் மாவீரர்களின் வித்துடல்கள் நேற்று பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இன்று பி.ப. 4 மணிக்கு மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் வித்துடல்கள் விதைக்கப்படவுள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ச)

# இராணுவ அனுசரணையுடனேயே விடுதலைப்புலிகள் மீது தாக்குதல்

## கண்காணிப்புக் குழுவிடம் கௌசல்யன் முறைப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவமானது இராணுவக் கட்டுப்பாட்டு வவுணதீவு இராணுவ முகாம் பகுதியூடாகவே நடத்தப் பட்டிருப்பதாக விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மேலும் தெரிவித்திருப் பதாவது,

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வவுணதீவு இராணுவ முகாம் ஊடாக இராணுவத்தின் அனுசரணையுடன் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை பொதுமக்கள் அவதானித்துள்ளனர். இதன் அடிப்படையில் தாக்குதல் நடத்தியோருக்கு இராணுவம் உதவி செய்ததை எம்மால் உறுதிசெய்ய முடியும் என்று யுத்தநிறுத்த கண்காணிப்பு குழுவிற்கு அறிவித்திருப்பதா

(12-ம் பக்கம் பார்க்க)

## தலை மின் கம்பத்துடன் மோதி சிறுமி பரிதாபகரமாக மரணம்

### பருத்தித்துறையில் சம்பவம்

(பருத்தித்துறை)

ஓடிக்கொண்டிருந்த மினிபஸ்ஸில் ஜன்னல்வழியாக தலையை வெளியே நீட்டிக்கொண்டு பயணம் செய்துகொண்டிருந்த சிறுமியொருத்தி தலை மின்கம்பத்தில் மோதி சிதறியதில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நெஞ்சை நெருடும் இத் துயரச் சம்பவம் நேற்றுக் காலை பருத்தித்துறை ஓடக்கரையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை எரிச்சம் அம்மன் கோயில் வீதியில் வசிக்கும் பென்சன் யுவிற்றா (வயது 13) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

பிரத்தியேகமாக ஒழுங்குசெய்யப்பட்ட மினிபஸ்ஸில் திருமண வீட்டிற்குச் சென்று நிகழ்வில் கலந்துகொண்டு விட்டு வீடு திரும்பிக்

(12-ம் பக்கம் பார்க்க)

# குருநாகலில் நேற்று குண்டுவெடிப்பு கருணா குழுவைச் சேர்ந்தவர் பலி?

(கொழும்பு)

குருநாகலில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில், மட்டக்களப்பைச் சேர்ந்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என தெரியவருகிறது.

குருநாகல் தம்புள்ள வீதியில் பொல் அத்துப்பிட்டிய சந்தியில் இக் குண்டு வெடிப்புச் சம்பவம் நேற்றுக்காலை 5 மணியளவில் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் உயிழந்தவர் அடையாளம் காணப்படவில்லை. ஆனால் சடலத்துக்கருகில் காணப்பட்ட கடவுச்சீட்டு, மற்றும் அடையாள அட்டையை அடிப்படையாகக் கொண்டு இறந்தவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவராக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

இக்குண்டுவெடிப்பில் இறந்தவரின் சடலத்துக்கருகில் மட்டக்களப்பு நாவற்குடாவைச் சேர்ந்த கே. துரைராஜசிங்கம் என்ற பெயருடையவரின் கடவுச்சீட்டும், அதே இடத்தைச் சேர்ந்த ஞானசூரியர் அஸ்ரின் போல் என்ற பெயருடையவரின் அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கைத்துப்பாக்கி, கிளைமோர் குண்டுகள், கையடக்கத் தொலைபேசி என்பனவும் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை ஞானசூரியர் அஸ்ரன் போல் என்பவர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் தனது அடையாள அட்டை கடந்த ஒருவருடத்திற்கு முன்னர் தொலைந்து போனதாக நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

அதேபோன்று கே. துரைராஜசிங்கம் என்பவர் முன்னாள் மட்டக்

(12-ம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியுடன் கலந்தாலோசித்தே நோர்வேக்கு அழைப்பு விடுக்கப்பட்டது

(கொழும்பு)

சமாதான முயற்சிகளுக்கு அனுசரணை வழங்க முன்வருமாறு நோர்வே அரசாங்கத்திடம் ஜனாதிபதி அழைப்பு விடுப்பதற்கு முன்னர் தமது கட்சியுடன் அதுபற்றி கலந்தாலோசிக்கப்பட்டதாக ஜே.வி.பியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும், மத்தியகுழு உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உள்விவகாரங்களில் வீணாகத் தலையிட்டமையினாலேயே நோர்வே தரப்பின் அனுசரணையை ஜே.வி.பி. எதிர்த்து வந்ததாக குறிப்பிட்டுள்ள இவர்,

நாட்டின் இறைமைக்கு குந்தகம் இல்லாத வகையில் நோர்வேயின் பங்களிப்பு அமையும் பட்சத்தில் அதனை ஜே.வி.பி. ஏற்றுக் கொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-10)

# சிறையில் இருந்து தப்பி வந்தவரால் திடுக்கிடும் பல தகவல்கள் அம்பலம்

(கொழும்பு)

விசேட அதிரடிப்படையினரால் 1986ம் ஆண்டு களவாஞ்சிக்குடியில் கைதுசெய்யப்பட்ட நபர், 18வருடங்களின் பின்னர் தப்பிவந்து திடுக்கிடும் பல தகவல்களை வெளியிட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினரின் தடுப்பு முகாம் ஒன்றில் இருந்து கடந்த வாரம் தப்பிவந்த கணபதிப்பிள்ளை முகநாதன் (வயது 40) சொந்த இடமான காத்தான்குடிக்கு வந்து தனது மனைவி, பிள்ளைகளை தேடியுள்ளார். மனைவி ஏற்கனவே இறந்துவிட்டதால் ஊரவர்கள் இவரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டபோது இரண்டு வயதுக் குழந்தையாக இருந்த தன் மகளை உறவினர்களின் உதவியுடன் சென்று பார்த்த போது ஆரம்பத்தில் தனது தந்தையென ஏற்றுக்கொள்ள மகள் மறுத்துவிட்டார். இதேவேளை,

1990ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 5ம் திகதி கிழக்குப் பல்கலைக்கழக அகதிமுகாமில் இருந்து விசேட அதிரடிப்படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட 150 பேரில் மூன்று பேர் தற்போதும் உயிருடன் இருக்கிறார்கள்

கடந்த 14 வருடங்களுக்கு முன் இராணுவத்தினரால் கொண்டுசெல்லப்பட்ட 150 பேரும் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என நம்பப் பட்டது.

ஆனால் சம்மாந்துறையைச் சேர்ந்த நாகலிங்கம் அருளானந்தராசா, கண்டிமணி யோகேஸ்வரன், திகாமணி புவிச்சமரன் ஆகிய மூவரும் என்னுடனேயே தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

1986ஆம் ஆண்டு களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை முகாம் சோதனைச்சாவடியில் வைத்து கைது செய்யப்பட்ட பலரில் அம்பாறையில் வைத்து 25பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 1990ம் ஆண்டுக்கு பின்னர் வடக்கு

(12-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைவரை விரைவில் சந்திப்பேன்

### விபசி தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை விரைவில் சந்திக்க உள்ளதாக உலக சமயங்களின் மன்றம் என்ற அமைப்பின் உயர் பதவியில் இருக்கும் சங்கைக்குரிய பங்கல விபுசி தேரர் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு மூன்றாம் தரப்பின் அனுசரணை அவசியமல்ல என்றும் நாட்டில் இடம்பெற்றுவரும் வன்செயலுக்கு தீர்வுகண்டு சமாதானத்தை ஏற்படுத்துவதே எமது நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு விவகாரங்களில் சம்மந்தப்பட்ட இரு தரப்பும் பேசி முடிவு காண்பதே சிறந்தது. இதற்கு நோர்வே, இந்தியா போன்ற நாடுகளின் அனுசரணை அவசியமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (தி-63)

## பிரதி சபாநாயகர் முத்து சிவலிங்கம்?

(கொழும்பு)

13ஆவது பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் பதவிக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பாக நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் முத்து சிவலிங்கத்தின் பெயரை

(12-ம் பக்கம் பார்க்க)

# மைக்கேல் ஜாக்சன் மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணை 30 ஆம் திகதி

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

பொப் இசைப்பாடகர் மைக்கேல ஜாக்சன் ,சிறுவன் ஒருவனிடம் தவறாக நடந்து கொண்டதாக குற்றம்சாட்டப்பட்டு தொடரப்பட்டவழக்கு விசாரணை எதிர் வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

45 வயதான மைக்கேல் ஜாக்சன், 12 வயது சிறுவன் ஒருவனுடன் சேர்ந்து மதுபானம் அருநதியதாகவும் பின் அவனிடம் தவறாக நடக்க முற்பட்டதாகவும குற்றஞ்சாட்டப்பட்டு "சாண்டா பார்பரா" நீதிமன்றில் கடந்த ஆண்டில் சிறுவனின் பெற்றோர் வழக்குத் தொடுத்திருந்தனர்.

இதனையடுத்து கடந்த நவம்பர் மாதம் மைக்கேல் ஜாகசன் கைது செய்யப்பட்ட போதும அவர் குற்றத்தை ஒப்புக் கொள்ளாதமையினால் 15கோடி டொலர் பிணையில் விடுதலையானார்.

இந்நிலையில் மைக்கல் ஜாக்சன் தவறாக நடந்து கொண்டமைக்கு போதுமான ஆதாரம் இருப்பதாகவும் சிறுவனின் பெற்றோர்கள் குறிப்பிட்டதையடுத்து அவர் மீது எதிர்வரும் 30ஆம் திகதி விசாரணை நடத்துவதற்கு நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது. (உ-10)

# சூடான் யுத்தத்திற்கு தீர்வுகாண நடவடிக்கை

(கார்டும்)

சூடானில்மிக நீண்ட காலமாக நடைபெறும் உளளூர் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் முற்கட்டமாக சூடான் தீவிரவாதிகளுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ள சூடானிய அரசு ஆலோசித்து வருகிறது.

இவ் உடன்படிக்கை இன்னும் ஓரிரு தினங்களில் கைச்சாத்திடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக சூடானில் தீவிரவாதிகளுடன முன்னோடிப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாக சூடானின் வெளிவிவகார அமைச்சர் முஸ்தப்பா ஒஸ்மானிஸ்மையில் தெரிவித்துள்ளார்.(தி-63)

# பயங்கர வாதத்தை அடக்க பிரிட்டனில் ஆள் அடையாள அட்டை

(லண்டன்)

பிரித்தானியாவில்நடைமுறைக்கு வரும் புதிய ஆள் அடையாளச் சட்டத்தின் மூலம் பயங்கர வாதத்தை எதிர்த்துப் போராட முடியுமென்று பிரித்தானிய உள் துறை அமைச்சர் டேவிற் தெரிவித்தார்.

ஞாயிற்றுக்கிழமை நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் இக்கருத்தினை அவர் வெளியிட்டார்.

புதிய அடையள அட்டை நகல் சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப பிக்கப்பட்டு அடுத்த வாரத்தில் பரீட்சார்ந்த அடையாள அட்டை அறிமுகமாகுமெனத தெரிவித தார்.

தொடர்ந்து பேசிய உள்துறை அமைச்சர் டேவிற் உலகம் மிகவும் முன்னேறி விட்ட தென்றும் புதிய புதிய முறையில் ஆள் அடையாள அட்டைகள் அதாவது கைவிரல அடையாளம் கண் போன்றவற்றைக் கொண்டும் வெளிவருமென்றும் தெரிவித்தார் .இதன் மூலம் பயங்கர வாதத்தை அடக்க முடியும் என்று அக்கூட்டத்தில் தெரிவித்தார். (உ)

# ஆபிரிக்கர்களை ஈவிரக்கமின்றி அராபியப் போராளிகளே கொன்றனர்

## மனித உரிமைகள் அமைப்பு கண்டனம்

(லண்டன்)

ஆபிரிக்கர்கள் 136பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் அராபி மற்றும் சூடானியப் போராளிகளுக்கு தொடர்பு இருப்பதாக நியூயோர்க்கை தலைமையகமாக கொண்ட மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

சூடான், சாட் முதலான நாடுகளில் அண்மைக் காலமாக மனிதப் படுகொலை சம்பவங்கள் இடம்பெற்றன.

கடந்த மாதம் மட்டும் சூடானில் 136 பேர் இனந்தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்டனர்.

இவர்கள் ஆயுதந்தாங்கிய குழுவினரால் கைதுசெய்யப்பட்டுமுழங்காலில் பின்னால் நின்ற துப்பாக்கிதாரர்களால் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தப் படுகொலைகளுக்கு சூடானிய அராபிய போராளிகள் காரணமாக இருந்திருக்கலாம் எனச்சந்தேககிக்கப்படுவதால் அவர்களை நீதியின் முன் நிறுத்தி விசாரணை செய்யவேண்டும் என அந்த அமைப்புக் கோரியுள்ளது.

(உ-10)



காலங்கள் மாறினும் பொலிவும் வலுவும் மாறாத சீனப் பெருஞ்சுவர் அருகில், ஜியான் நகரில் சனிக்கிழமை திருமணம் செய்து கொண்ட 30 புது ஜோடிகள்.

# வாக்களிப்பு தோல்வி அடைந்தது

(கிரேக்கம)

சைப்பிரஸ் தீவுகளை ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைக்கும் பொருட்டு ஐ.நா.வின் வேண்டுகோளுக்கு இணங்க நடத்தப்பட்ட வாக்களிப்பு தோல்வியடைந்துள்ளது.

கிரேக்க சைப்பிரஸ்வாசிகளிடமும் துருக்கியவாசிகளிடமும் நடத்தப்பட்ட இந்த வாக்கெடுப்பில் 24.2 சதவீதமான்வர்களே சைப்பிரஸ் தீவுகளை ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைத்துக் கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

(உ-10)




அமெரிக்காவின் நியூயார்க் நகரின் மன்ஹாட்டன் வீதியில் சீக்கியர் தின விழாவை பாங்கடா (அறுவடைத் திருவிழா) நடனமாடி சனிக்கிழமை கொண்டாடும் சீக்கிய இளைஞர்கள்.

# புஷ்ஷின் கஞ்சத்தனத்தை கண்டிக்கிறார்சவுதி மன்னர்

(றியாட்)

ஈராக்கில் படைத்தளபதிகளுககாக அமெரிக்கா 20 கோடி டொலாகள் பணத்தை செலவு செய்திருந்தால், ஈராக்கில் தற்பொழுது இடமபெற்றுவரும் கிளர்ச்சிவாதத்தாக்குதல்களைத் தவிர்த்திருக்கலாம என சவூதி அரேபியாவின் மன்னர் பந்தர் பின்சுல்தான் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் மீது படையெடுத்த அமெரிக்கா தனது ஆட்சியை அங்கு தகக வைக்க வேண்டுமாயின் ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு விசுவாசமான இராணுவத்தளபதிகளை விலைக்கு வாங்கியிருக்கலாம். இதற்காக குறைந்த பட்சம் 20 கோடி டொலர்களை அமெரிக்க அதிபர் ஜோச் புஷ் செலவு செய்திருந்தால் அவர்களது விசுவாசம் அமெரிக்காவுக்கு கிடைத்திருக்கும். இதன் மூலம் அமெரிக்கப் படைகளுக்கெதிராக இடம் பெறும் கிளர்ச்சி வாதத்தாக்குதல்களையும் உயிரிழப்புக்களையும் தவிர்த்திருக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளனர். (உ4,60)



உலகின் முதல் இரயில் மருத்துவமனையான லைஃப் லைன் எக்ஸ்பிரஸில் அண்மையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட குழந்தைக்கு உணவூட்டுகிறார் இந்திய அழகி சாயாலிபகத்.

# முஸ்லிம்கள் — கிறிஸ்தவர்கள் இத்தோனேசியாவில் மோதல்

## 10 பேர் பலி, 90 பேர் படுகாயம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் அம்போ நகரில் முஸ்லிம்களும் கிறிஸதவர்களுக்கும் இடையே நேற்று மதச் சண்டை மூண்டது.

இம்மதச் சண்டையின் போது 10 பேர் உயிரிழத்ததுடன், 90பேர் படுகாயமடைநதுள்ளனர்.

தெற்கு மனுக்குக் குடியரசின் 54ஆவது நிறுவக நாள் கொண்டாட்டத்தின் போது இம்மதச் சண்டை மூண்டது.

இவ்விரு மதப்பிபரிவினரையும் அடக்கும முயற்சிகளில் இந்தோனேசியப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, இம்மதக் கலவரம் காரணமாக இந்தோனேசியாவில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகமும் அங்கு தீவைத்துக கொளுத்தப்பட்டது.

(தி-63)

# தர்மராஜ்ஜியம் என்ற மாயையைக் காட்டி மக்களை ஏமாற்றிவிட்டது ஹெலஉறுமய

## ஜே.வி.பி.சீற்றம்

(கொழும்பு)

தர்மராஜ்ஜியத்தை உருவாககுவதாகக் கூறிக்கொண்டு சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளைக் கொள்ளையடித்த ஜாதிக ஹெல உறுமய ஈழம் கோருபவருக்கு துணை போவது எந்த வகையில் நியாயம் என ஜே.வி.பி. கேள்வி எழுப்பியுள்ளது.

இதுதொடர்பான அறிககையொன்றையும் ஜே.வி.பி. வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவக்கப்பட்டிருப்பதாவது ,ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினராக ஓமல் பேரோபித தேரரின் விகாரை முன்பாக எமது கட்சியின் ஆதரவாளர்கள் கறுப்புக் கொடிகளைக் கட்டியதாக அந்தக் கட்சி குற்றம் சுமத்துகின்றது.

ஆனால் எமது கட்சி அவ்வாறு செயற்படவில்லை.கடந்த 22 ஆம் திகதி பாராளுமன்ற அமர்வின் போது சபாநாயகர் தெரிவு இடம் பெற்றபோது ஹெல உறுமய நடந்துகொண்ட விதம் தொடாபாக அதிருப்தி அடைந்த பொது மக்களே கறுப்புக் கொடிகளைக் கட்டினார்கள்.

அந்தளவுக்கு ஜாதிக ஹெல ஊறுமயவுக்கு வாக்களித்த மக்கள் பிக்குமார் மீது அதிருப்தி அடைந்துள்ளனர் என ஜே.வி.பியினர் விடுத்த அந்த அறிக்கையில் தொிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## தமிழீழக் காவல்துறையினரால்

# நல்லெண்ண அடிப்படையில் சிங்கள இளைஞன் விடுதலை

தமிழீழ காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருந்த சிங்கள இளைஞர் ஒருவரை அனைததுலக செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக தமிழீழ காவல்துறையினர் விடுதலை செய்துள்ளார்கள்.

கிளிநொச்சியில் ஒப்பந்த அடிப்படையின் நிமித்தம் வேலையில் இருந்த மாத்தறையைச் சேர்ந்த சஜித் பேமந்த என்ற இந்த இளைஞரை ரி-56 ரக துப்பாக்கியுடன், கடந்த ஆண்டு தமிழீழக் காவல்துறையினர் கைது செய்து தமிழீழ நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள்.

இவரின் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்ததனால், விசாரணைக் காக இவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இவரின் தநதையார் காலமாகிவிட்ட செயதி அனைத்துலக செஞ்சிலுவைசசங்க ஊடாக கிடைத்ததையடு த்து, இதனை கருத்திற் கொண்டு நல்லெண்ண நோக்கோடு இவரை அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக விடுதலை செயதுள்ளார்கள். (உ)

# ஜாதிக ஹெல உறுமய எம்.பிக்கள் கூட்டமைப்புக்கு ஒத்தூதுகின்றனர்

## ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியில் உள்ள பிக்கு எம்.பிகளுக்கும் புலிகளின் பேராதரவுடன் பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூடடமைப்பு எம்.பிக்களுக்குமிடையே பரஸ்பர புரிந்துணர்வும் பொது இணக்கப்பாடும் காணப்படுவதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஜனதாச பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாங்கொக்கில் இருந்து வெளியாகும் ஏசியன் த்ரிபியூன் என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்தும் வழங்கிய செவ்வியில், பௌத்த பிக்கு எம்.பிக்கள் தர்மராஜ்ஜியக் கொள்கையைக் கைவிட்டுவிட்டு தமிழ் ஈழ இராஜ்ஜியக் கொள்கையையே முனவைப்பதாகத் தெரிகின்றது.

இதைப்பார்க்கும் போது பிக்கு எம்.பிக்கள் சிங்கள மக்களுக்கு துரோகம் இழைத்துவிட்டார்கள் என்று கூறுவதே பொருத்தமானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒத்து ஊதிவரும் பிக்கு எம்.பிக்கள் அரசுக்கு எதிராக செயற்படுவதை சிங்கள் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்என்றும் கூறினார் (உ-10)

# கட்டுநாயக்க பணியாளர்கள் சட்டப்படி வேலை நிறுத்தப் போராட்டம்

## விமான நிலையப்பணிகள் தாமதம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பணியாற்றும் குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் சட்டப்படி வேலை என்ற போராட்டத்தை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்கள் காரணமாக சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள அதிகாரிகள் சிலரை மீண்டும் வேலையில் இணைத்துக் கொள்ளுமாறு கோரியே இவர்கள் இந்த சட்டப்படி வேலை நிறுத்தம் என்ற போராடடத்தை ஆரம்பித்துள்ளனர். இதன் காரணமாக விமானநிலையத்தின் ஊடாக பிறநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் இலங்கை யில் இருந்து வெளியே செல்லும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

வழமையாக அரைமணி நேரத்தினுள் முடிவடையும் விமானப்பயணி ஒருவரின் குடிவரவு குடியகல்வுப் பதிவுகளுக்கு தறபோது 3.00-4.00 மணிநேரம் தேவைப்படுவதாக விமான நிலையச் செயற்பாட்டாளர் தெரிவித்துள்ளார்

போலிக் கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி நாட்டைவிட்டு வெளியேறமுடியாத அளவுக்கு கடவுச் சீட்டுக்கள் தொடர்பான சகல தரவுகளும் கணனி மயப்படுத்தப்பட்டுள்ளதால் எந்தவொரு அதிகாரியும் மோசடிகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லையென குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் மேவின் விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்ட சிலரே கடந்த காலங்களில் மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர்.இவர்களே தற்போது சட்டபபடி வேலை என்ற போராட்டதததை ஆரம்பித்துள்ளனர் என அவர் தெரிவித்தார். (தி-63)

## காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை

# குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் இன்று யாழ் வருகை

(யாழ்ப்பாணம்)

1996,1997ஆம் ஆண்டு காலப் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும வகையில் கொழும்பு குற்றப் புலனாய்வு திணைக்களத்தின காணாமற் போனவர்கள் சம்பந்தமான விசாரணைப் பிரிவினா இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

பொலிஸ் பரிட்சகர் ஜெயரத்தன தலைமையில் வருகை தரவுள்ள இவ் விசாரணைப் பிரிவின் எண்மர் கொண்ட குழுவினர் இன்று முதல் நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளனர் இந்த வகையில் இக்குழுவினர் சுமார் பத்துத்தினங்கள் இங்கு தங்கிநிற்கவுள்ளதுடன் நாளை புதன்கிழமை மற்றும் நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆகிய தினங்களில் சாவகச் சேரிப் பொலிஸ் நிலையத்திலும் எதிாவரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மானிப்பாய் பொலிஸ் நிலையத்திலும் எதிர்வரும் மேமாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் யாழ். பொலிஸ் நிலையத்திலும் வைத்து காணாமல் போனதாக முறைப்பாடு செய்யப்பட்ட 37 பேர் தொடர்பில் அவர்களது உறவினர்களிடம் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த விசாரணை அறிக்கை பாதுகாப்பு அமைச்சின் ஊடாக காணாமல் போனோர் சம்மந்தமான குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (உ)

# குருநாகலில் குண்டு வெடிப்பு மட்டு வாசி உயிரிழப்பு

(குருநாகல்)

குருநாகல் பொல் அத்துப்பிட்டிப் பகுதியில் நேற்று அதிகாலை இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்

இக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவரே உயிரிழந்துள்ளார் என குருநாகல் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விஜயவர்த்தன தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த நபரின் இடுப்புக்குக் கீழ் உள்ள உறுப்புக்கள் அனைத்தும் சிதைவடைந்து விட்டன.

இச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்து கைத்துப்பாக்கி ஒன்றைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (தி-63)

# தமிழ் மக்களே எனது பாதுகாப்புக் கவசம் பொலிஸ் பாதுகாப்பு தேவையில்லை



(திருநெல்வேலி)

## கஜேந்திரன் எம்.பி.உறுதியுடன் தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தனக்குரிய இராணுவ பொலிஸ் பாதுகாப்பு பெறப்போவதில்லையென தமிழ்த் தேசியக கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் தெரிவித்தார்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.கே.சிவாஜிலிங்கம், என். ரவிராஜ், சுரேஸ் பிரேமச்சநதிரன் ஆகியோர் இராணுவ பொலிஸ் பாதுகாப்பை பெற்றுள்ள வேளை இப் பாதுகாப்பு ஏற்பாட்டில் நாட்டம் கொள்ளாதிருப்பது குறித்துக் கேட்டபோதே கஜேந்திரன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், எனக்குரிய பாதுகாப்பு கவசம எமது உயிரிலும் மேலான தமிழ் மக்கள்தான். இந்த வகையில் நான் எந்தக் காலததிலும் மாற்றநாரின் பாதுகாப்பை நாடப போவதில்லை.

இதேவேளை கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி பத்மினி சிதமபரநாதன், எஸ். சிவனேசன், ம.க. ஈழவேந்தன ஆகியோரும் இராணுவ பொலிஸ பாதுகாப்பை இன்னமும் கோரவில்லை 6 ன்று குறிப்பிடத்தக்கது. (உ-43)

## அடிப்படை வசதிகளை நிறைவு செய்க

வவுனியா வைத்தியசாலையின் அடிப்படைவசதிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் சுகாதார அமைச்சர். சிறிபால டி சில்வாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற புதிய அரசின் முதலாவது பாராளுமன்ற அமர்வின் போதே இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதனைத்தொடாந்து மேற்படி வைத்தியசாலையின் தேவைகள் குறிதத பட்டியலை அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவித்த சுகாதார அமைச்சர் இம்முறை வடக்குக் கிழக்கு வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கப்படும் என உறுதியளித்துள்ளார். (உ-35)

# எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

கட்டுநாயக்காவில் உள்ள தொழில்நுட்பவலர் பயிற்சி நிலையத்தில் எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா 4 வருடம் பயிற்சி நெறிக்கு எந்திரவியல் சிறப்புப் பயிலுநர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையால் கோரப்பட்டுள்ளன.

ஜீ.சீ.ஈ(உயர்தர) பரீட்சையில் விஞ்ஞான எந்திரவியல் பாடங்களில் சித்தியடைந்த 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவாகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பங்கள் 06.06.2004 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படவேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரங்களை 23.04.2004 இல் 1338 வர்த்தமானியில் பார்வையிடலாம் என தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் மேற்படி சபையின் இலக்கம் 7, கோவில் வீதியில் உள்ள வட மாகாண அலுவலகத்தில் பெறலாம். (உ)

# குடும்ப நல உத்தியோகத்தர் 600 பேர் நியமிக்கப்படுவர்

வடக்குக் கிழக்கு மாகாணததில் தாய் சேய்நல மேம்பாட்டுததிட்டத்தின் கீழ் 600 குடும்ப நல உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான அனுமதியை சுகாதாரப் போசாக்கு நலன்புரி அமைச்சு வழங்கியுள்ளதாக வடக்குக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் புதிய உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி கள் அரம்பிக்கப்படவுள்ளது. இப் பயிற்சிகள் யாழ்ப்பாணம்,திருகோணமலை,மட்டக்களப்பு ஆகிய பிராந்தியப் பயிற்சி நிலையங்களில நடத்தப்படவுள்ளன.

இப் பயிற்சிகளை பெறுவோருக்கான நியமனங்களும் உடனடியாகவே வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றுவதற்கு 280 குடும்ப நல உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்ற போதும் இங்கு 80 பேர் மட்டுமே சேவையில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ-252)

# சமாதானப் பேச்சை உடனடியாக ஆரம்பிப்பதில் பல்வேறு சிக்கல்கள்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் எம். பி. வெளிநாட்டு ஊடகத்திற்கு விளக்கம்

(கொழும்பு)

**சர்வதேச நாடுகளின் உதவியைப் பெறும் நோக்கில் ஜனாதிபதி சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பாராயின் அந்தப் பேச்சுவார்த்தை தோல்வியிலேயே முடியும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு நோர்வேக்கு அழைப்பு விடுத்திருப்பது குறித்து வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவித்த தமிழர் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.**



தொடர்ந்து கருத்துக் கூறிய பிரேமச்சந்திரன்,

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வந்த சமாதான நடவடிக்கைகள் குறித்து விமர்சித்து வந்த ஜனாதிபதி நோர்வே பக்கச் சார்பாக நடந்து கொள்வதால் இந்தியாவின் அனுசரணையுடன் சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறிவந்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த பின்னரும் கூட பிரதமரும் ஜனாதிபதியும் இந்தியாவின் அனுசரணையையே பெரிதும் விரும்பினார்கள்.

இந்நிலையில், ஜனாதிபதி திடீரென நோர்வேயின் உதவியை மீண்டும் நாடியிருப்பது தற்போது பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச நாடுகளின் நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்காக இவர் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க முயற்சிக்கின்றாரா? அல்லது சிறுபான்மை மக்களின் நலனைக் கருத்தில் கொண்டுதான் சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க முயற்சிக்கின்றாரா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இதேவேளை, சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ள நோர்வே சமாதானத் தூதுக் குழுவினர் அடுத்த வாரமளவில் இலங்கை வரவுள்ளனர்.

இப்பயணத்தின்போது சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முன்னர் அதுபற்றித் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் விரிவாகக் கலந்துரையாடவுள்ளனர்.

அதன்பின்னரே சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைளை அவர்கள் மேற்கொள்வார்கள் எனக் கூறப்படுகின்றது.

இதற்கிடையில் நோர்வே சமாதானக் குழுவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களும் சந்தித்துப் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்து வருகின்றார்கள்.

அவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நோர்வே சமாதானக் குழுவை சந்திக்கும் பட்சத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலை, மக்களின் தேவைகள் பூர்த்திசெய்யப்படாதிருக்கின்றமை என்பன குறித்து விளக்கிக்கூறப்படும் என எதிர்பார்க்கினறேன்.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகள் கோரிவரும் இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதற்கு தற்போதுள்ள அரசு இணங்குமா? என்பது பற்றியும் நோர்வே தூதுக் குழுவின் ஊடாகக் கேட்டறியவுள்ளோம்.

இதற்கிடையில் ஐக்கிய மக்கள் சுதந்தர முன்னணி அரசாங்கம் குறுகிய காலத்துககே ஆட்சியிலிருக்கும் என அரசியல் ஆய்வாளர்கள் கூறிவருகின்றார்கள்.

இனவாதக் கட்சிகள் சிலவற்றைக் கூட்டுச் சேர்த்து ஆட்சிக்கு வந்த அரசாங்கத்துக்கு தற்போது அந்தக் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க மறுத்து வருகின்றமையே அதற்குக் காரணம் எனவும் அவர்கள் கூறுகின்றார்கள். அதுமட்டுமன்றி, கடந்த 22ஆம் திகதி நடைபெற்ற சபாநாயகர் தெரிவில் ஆளும் கட்சியில் உள்ளவர்கள் புரிந்த அடாவடித்தனங்களினால் பெரும்பான்மைக் கட்சிகள் சிலவற்றின் ஆதரவு அரசுக்குக் கிடைக்காமல் போனதுடன், எதிர்க்கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்த ஒருவரே சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டமையும் அரசுக்குக் கிடைத்த பெரும் தோல்வி என்றே கூறவேணடும்.

இத்தகைய நிலையில் எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி பாராளுமன்றம் மீண்டும் கூடவுள்ளது.

அன்றைய தினம் சபை முதல்வர்; பிரதிச் சபாநாயகர் தெரிவுகள் இடம்பெறவுள்ளன.

அன்றைய தினத்தில் ஜனாதிபதி பெரும்பான்மைப் பலத்தைக் காட்ட முயற்சிப்பாரா? அல்லது பாராளுமன்றத்தை மூன்று மாதத்திற்கு ஒத்திவைத்து அதற்கிடைப்பட்ட காலப்பகுதியில் அரசுக்குத் தேவையான பலத்தைச் சேர்த்துக் கொள்வாரா? என்ற பல கேள்விகளும் எதிர்க்கட்சித் தரப்பில் இருந்து எழுந்துளளன.

எனவே, உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதால் பல சிக்கல்கள் தோன்றுவதுடன், அது சாத்தியப்படாத ஒன்றாகவே இருக்கின்றது என்றார்.

(உ-63,10)

# வடமேல் மாகாண சபை தேர்தலில் வன்முறைகள்

## பவ்ரல் அமைப்பு அறிக்கை

(கொழும்பு)

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வடமேல் மாகாண சபைத் தேர்தலின்போது குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்ளில் பல தேர்தல் வன்செயல்கள் இடம்பெற்றதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இத்தேர்தல் தொடர்பாக அவ்வமைப்பு விடுத்துள்ள அறிக்கையில தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்த வாக்களிப்பின்போது சில வாக்கெடுப்பு நிலையங்களில் அமைதியின்மை நிலவியது.

குருநாகல் மாவட்டத்தில் உள்ள மாவத்தகம, யாப்ப கூவ, கல்கமுவ, கரியால போன்ற பிரதேசங்களிலும் புத்தளம் மாவட்டத்தில் புத்தளம், வங்கதெனியா, ஆராய்ச்சிக் கட்டுவ, சிலாபம் போன்ற பிரதேசங்களிலும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

எனினும் இந்தச் சம்பவங்களினால் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலில் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பவ்ரல் அமைப்பைச் சேர்ந்த 2ஆயிரத்து 350 கண்காணிப்பாளர்கள் இந்தத் தேர்தலின்போது கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(தி-121)

# ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியை மாகாண சபைத் தேர்தல் உறுதிசெய்துள்ளது

## ஐ.ம.சு.மு. செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த வடமேல் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை மக்கள் வெற்றிபெறச் செய்திருக்கின்றார்கள். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியை 13வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் நிராகரித்தது போல் இந்த மாகாண சபைத் தேர்தலிலும் நிராகரித்திருக்கின்றார்கள் என்று சுட்டிக்காட்டியுள்ளார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன.

இதுபற்றி அவர் மேலும் கருதத்துத் தெரிவிக்கும்போது,

நேற்று முன்தினம் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றியீட்டியிருப்பது பொதுத் தேர்தலில் பெற்ற வெற்றியை மேலும் வலுப்படுத்தியிருக்கின்றது.

பாராளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவின்போது இடம்பெற்ற சம்பவங்களுக்கு மக்கள் விசனம் தெரிவித்திருக்கின்றார்கள். வடமேல் மாகாணத்தில் பாராளுமன்றத் தேர்தலில் கிடைக்கப்பெற்ற வாக்குகளுடன் ஒப்பிடும்போது மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு கிடைக்கப பெற்ற வாக்குகள் அதிகரித்துள்ளன என்று தெரிவித்துள்ளார்.

(உ-121)

# அரசியலில் அதிகளவு பெண்கள் ஈடுபடுவதை உறுதிசெய்யச் சட்டம்

## மகளிர் விவகார அமைச்சர் நடவடிக்கை

(கொழும்பு)

பெருமளவு பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு வழிவகுக்கும் சட்டம் ஒன்று விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக மகளிர் விவகார அமைச்சர் சுமேதா ஜயசேன தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இலங்கையில் அரசியலில் பெண்கள் ஈடுபடும் வாய்ப்பை அதிகரிக்க முடியும். அத்துடன், அரசியல்வாதிகளிடையே ஊழலைக் குறைக்கவும் வழி ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி அமைச்சர் சுமேதா ஜயசேன கூறுகையில்,

தற்போது அரசியலில் பெண்கள் ஈடுபடுவது குறைவாக உள்ளது. 2004 பொதுத் தேர்தலில் பெண் வேட்பாளர்களின எண்ணிக்கை 2002 பொதுத் தேர்தலை விடக் குறைவாகவே இருந்தது. பொ.ஐ.மு. ஆட்சிக் காலத்தில் நான் மகளிர் விவகார அமைசசராக இருந்தபோது பெண்கள் அதிகமாக அரசியலில் ஈடுபடுவதற்கு வழி ஏற்படுத்துவதற்கு பல நடவடிக்கைகளை எடுத்திருந்தேன். மொத்த தேர்வாளர்களில், ஒவ்வொரு கட்சியிலும் 25 வீதமானோர் பெண்கள் இருக்கவேணடும் என அனைத்துக் கடசிகளுடனும் பேசியிருந்தேன்.

ஆனால், இவை முன்னர் அமுல்படுத்தப்படாததால் இனிமேல் இதுபற்றி கட்சிகளுடன் கலந்துரையாடவுள்ளேன். பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் விசேட திட்டங்களை விரைவில் அமுல்படுத்தவுள்ளேன் என்று தெரிவித்தார்.

(உ-6)

# பொகவந்தலாவையில் மழை 80 குடும்பங்கள் இடம்பெயர்வு

(கொழும்பு)

பொகவந்தலாவைப் பகுதியில் நேற்று முன்தினம் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்தது. இதனால் கொட்டியாகல கீழ்ப் பிரிவுகளைச் சேர்ந்த 80 குடும்பங்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறித் தோட்ட வாசிகசாலைகளிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

மலையகத்தில் கடந்த இரு நாட்களாகத் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக தோட்டத் தொழிலாளர்களின் லயன்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான உணவுப் பொருள்களையும் நிவாரண உதவிகளையும் அம்பகமுவப் பிரதேச சபையினர் மேற்கொண்டு வருகின்றனர் என்பதுடன்,

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுகளை வழங்க அரசாங்கமும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

(கி-63)

# கைதாகி காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளுக்காக உறவினர்க்கு அழைப்பு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் கடந்த 1996,1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனதாக முறைபபாடு செய்யப்பட்டுள்ள கீழ்காணும் நபர்கள் சம்பந்தமாக குற்றப புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணை மேற்கொண்டுள்ளார்கள்.

இவ் விசாரணைகளுக்காக கொழும்பிலிருந்து குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் காணாமல் போனவர்கள் சம்பந்தமான விசாரணைப் பிரிவினர் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

கீழே குறிபபிட்ட பெயரினை உடைய காணாமல் போனவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர், அல்லது முறைப்பாடுக்காரர் அல்லது இவர்களில் எவரேனும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்திற்கு உரிய ஆவணங்களுடன் வருமாறு அழைக்கப் பட்டுள்ளனர்.

எதிர்வரும் மே மாதம் 12ஆம திகதிகளில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் பின்வரும் தொடர்பான விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

*அன்டன் மனோகரன்-ஜீவகுமார் வரதன், இல.10/4, கண்டிவீதி, குருநகர் யாழ்ப்பாணம்.

*அருளானந்தன் சார்ல்ஸ்,- இல 50/3, இராசலிங்கம் வீதி, யாழ்ப் பாணம்.

*அருளானந்தம் உதயகுமார்- இல.34, 3ஆம் குறுக்குத்தெரு, அராலி வீதி, யாழ்.நகர்.

*செல்லையா கந்தசாமி- கோண் டாவில்,

* ஜேசுதாசன் வெலன்டய்ன்- இல 78/11 கடற்கரை வீதி, நாவாந்துறை.

* கே.நேசகுமார்-கோண்டாவில்.

*மரியதாஸ் அன்டன் மார்கலன்-இல.23 புதிய பூங்கா வீதி, குருநகர்.

* என.அருளப்பலம்-இல.75பl. எஸ். ஒழுங்கை, கண்டி வீதி யாழ்ப்பாணம்.

* ரி.தங்கராஜா-கல்வியங்காடு,

* எஸ்.சசீந்தன்-இல.55, பாடசாலை ஒழுங்கை வண்ணார் பண்ணை.

இம்மாதம் 28,29ஆம் திகதிகளில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பின்வருவோர் சம்பந்தமான விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

* அன்டன் சத்தியநாதன்-3ஆம் குறுக்குத்தெரு, பாசையூர்.

* அப்பையா கேதார கௌரி- கைதடி, சாவகச்சேரி.

* கட்டையன் சன்முகலிங்கம்- கைதடி, சாவகச்சேரி.

* கனகரத்தினம் கிருத்ரன்- கைதடி சாவகச்சேரி.

* மீனாட்சி தவராசா முள்ளி வீதி, அரியாலை.

* நவசி ஜயசீலன்-நுணாவில் சந்தி, கண்டி வீதி, சாவகச்சேரி.

* பாலசுப்பிரமணியம் துஷ்யந்தன்-இல.32/1, அராலி தெற்கு, மீசாலை.

* ஜேசுதாசன் மரியநாயகம்- உசன், மிருசுவில்.

* நடராசா ஜோதிபாரதி- மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

*நாகராஜா பகீரதன்-கண ணன கோவிலடி மட்டுவில், சவாகச்சேரி.

*அசிதலிங்கம், அப்பு குட்டி- தவிசிகுலம், கொடிகாமம்.

* கந்தையா குணநாதன்-காஞ்சனாவடி, கொக்குவில்.

*மார்க்கண்டு ரெங்கநாதன்- சப்பச்சிமாவடி, சாவகச்சேரி.

நிக்சன் ஜராட் பிள்ளையார் கோவிலடி நெடுங்குளம்.

எதிர்வரும் 30ஆம் திகதி மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் பின்வருவோர் தொடர்பான விசாரணைகள் இடம் பெறவுள்ளன.

* அன்டன் ஜோசப்-நாவற்குழி, புத்தூர்.

* கந்தையா தியாகராஜா-வசாவிளான், பலாலி வடக்கு.

* அந்தோனிபபிள்ளை மருசீலன், புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

*பாலசுப்பிரமணியம் துஷ்யந்தன்- புன்னாலைக்கட்டுவன், தெற்கு.

*கந்தன் இந்திரன்-உயரப்புலம், இளவாலை.

* கே.பத்மரத்தினம்-நவாலி, இளவாலை.

* கிட்னர் அமிர்தலிங்கம், இல. 24,கட்டுகுலம் வீதி, கோப்பாய்.

* நல்லதம்பி விக்னேஸ்வரன பொலிகண்டி வீதி, கோப்பாய்.

* கலைராசா நடராசா, கொண்டலடி, சங்கானை.

*கல்யாணி சுந்தரம், நீர்வேலி வடக்கு, மானிப்பாய்.

* கந்தையா சிவகுமார்-சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டை.

* நடராசா இரவீந்திரன்-சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

* நாகமுத்து கோபிராஜ் காணாமல் போனமை சம்பந்தமாக சாட்சிகள்:-கண்ணன் அவரின் மனைவி உமா ஆனந்தன் வீதி, மானிப்பாய். (உ)

## சிறப்புச் சொற்பொழிவு

(தும்பளை)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலில் பெரியாழ்வார் ஆச்சிரமததில் உள்ள ஸ்ரீகிருஷ்ண பஜனை மண்டபத்தில் சென்ற 18ஆம திகதி தொடக்கம் பிரதி ஞாயிறு தோறும் தொடர் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சைவப் புலவர் கீழ்க் கரவையூர் நவரத்தினம் ஆசிரியரின் வெல்வினை தீக்கும் விநாயகனே எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது. (உ-24)

## 800 வன்முறைகள் குறித்து நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

கடந்த 2ஆம் திகதி நடந்து முடிந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் 800 சம்பவங்கள் தொடர்பாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

இவ் 800முறைப்பாடுகளும் தேர்தல் குற்றவியல் சட்டத்தை மீறியுள்ளதாகப் பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் ஆயிரத்து 300க்கும் அதிகமான தேர்தல் வன்முறைகள் இடமபெறறதாக பொலிஸ் தேர்தல் திணைக்களப் பதிவு அறிவித்துள்ளது.

இம்முறைப்பாடுகளில் தேர்தல் தினத்தன்று கள்ளவாக்குகள் போடமுற்பட்டவர்கள் மீது வழக்குத்தொடர சட்டமாஅதிபர் கே.சி.கமலசபேசனின் ஆலோசனை பெறப்படவுள்ளது. (தி63)

## அனைத்துத் தரப்பினதும் ஒத்துழைப்போடு அரசியல் அமைப்பில் திருத்தம் அவசியம்

### முன்னாள் அமைச்சர் பீரிஸ் அங்கீகாரம்

(கொழும்பு)

நிலையான அரசியலமைப்பு ஒன்று இருக்கக்கூடிய வகையில் தற்போதைய அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்பட வேண்டு மென முன்னாள் அரசியல் விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அஸ்கிரிய மாவத்தை பீடாதிபதியைச் சந்தித்த பின்னர் கொழும்பு தனியார் வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்விதம் குறிப்பிட்ட அவர், மேலும் கூறுகையில்,

இதனை முன்னிட்டு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளினதும் இணக்கப்பாட்டைப் பெறவேண்டும்.

ஏதேனும் கட்சி ஒன்றினதோ அல்லது தனிநபர் ஒருவரினதோ விருப்பு வெறுப்புக்களுக்கு அமைய அரசியலமைப்பு மாற்றம் செய்யப் படலாகாது.

25 ஆண்டுகால பழமை வாய்ந்த தற்போதைய அரசியல் யாப்பில் சில மாற்றங்கள் செய்யப் படவேண்டுமென்பதை ஒப்புக்கொளகின்றேன்.

அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டு மானால் சகல அரசியல் கட்சி களினது இணக்கப்பாட்டுடனும் தூரநோக்குடனும் அவை மாற்றப் பட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கம். (உ-121)

## கணிப் பீட்டுப் புள்ளிகளை பெறுபேற்றுடன் இணைக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் நடைபெறுகின்ற கணிப்பீட்டுப் பரீட்சைகளின் புள்ளிகளை க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுடன் இணைத்துக்கொள்ள கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கல்வி அமைச்சின் இத்திட்டத்திற்கமைவாக க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் அரசினால்அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

இந் நடைமுறை எதிர்வரும் பரீடசைகளில் இருந்து அமுலுக்கு வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (தி-4)

## ஜாதிக ஹெல உறுமய எம்.பி.க்களுக்கு தொலைபேசியூடாக கொலை மிரட்டல்

### ஜே.வி.பி.மீது சந்தேகம்

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமயக்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு தொலைபேசியூடாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐககிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியினரே இந்தக் கொலை அச்சுறுத்தலை விடுத்திருப்பதாக சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸாரிடம் தெரிவிததுள்ளார்கள்.

ஆனால், ஜாதிகஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்தக் குற்றச்சாட்டை ஜே.வி.பியினர் நிராகரித்துள்ளனர்.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில உள்ள சிலர் கடத்திச சென்று அவர்களுக்குப் பெருந்தொகைப் பணததைக் கொடுத்து விலைககு வாங்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டையும் ஜே.வி.பியினர் நிராகரித்துள்ளனர்.

தமது கட்சிமீது ஜாதிகஹெல உறுமய வீணான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி பழிவாங்க முயல்வதாகவும் அதனை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஜே.வி.பி.தெரிவித்துள்ளது. (உ-10)

## கிஷோரின் இடத்திற்கு பாலகிருஷ்ணன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழுமபுத் தலைமையக ஆளுநர் சபை உறுப்பினராக குலசேகரமபிள்ளை பாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆளுநர் சபை உறுப்பினராக இருந்துவந்த கிஷோர் சிவநாதன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானதை அடுத்தே அந்த இடத்திற்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளையின் முன்னாள் உபதலைவரான பாலகிருஷ்ணன் செஞ்சிலுவைச்சங்க வேலணைப் பிரிவின் முன்னாள் தலைவருமாவார். (உ)

## நல்லுறவை மீளக்கட்டியெழுப்பும் வகையில் இராமநாதபுரம் மீனவர்கள் நாளை யாழ்.வருகின்றனர்

(திருநெல்வேலி)

வடபகுதி மற்றும் தமிழக மீனவர்களிடையே நல்லுறவை மீளக் கட்டியெழுப்பும் வகையில், நாளை புதன்கிழமை இராமநாதபுரம் றோலர் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் 12 பேர் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகளை சமாச அலுவலகத்தில் வைத்துச் சந்திக்கவுள்ள இவர்கள், வடபகுதி மீனவர்களும் தமிழக மீனவர்களும் பிணக்குகள் ஏதுமின்றி கடற்றொழிலில் ஈடுபடுவது குறித்து ஆராயவுள்ளனர்.

இச் சந்திப்பின்போது, வடபகுதிக் கடல்வளம் சுரண்டல் தடுப்புப்பற்றிய உறுதியான முடிவொனறு எட்டப்படும் என வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் 'சமாச வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

இலங்கைக்கான இந்தியத் தூதரக ஏற்பாட்டில் இடம்பெறுகின்ற இந்தச் சந்திப்பில் யாழ. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளார்.

மேற்படி சந்திப்பில் எட்டப்படுகின்ற முடிவுகள் தொடரில் தான் இந்தியத் தூதரகத்துடன் கலந்து பேசவிருப்பதாகவும் அவர் எம்மிடம் தெரிவித்தார். (உ-43)

## ஐ.தே.க.நாடாமன்ற உறுப்பினரானாலும் தமிழ்த் தேசியத்துக்கான என் பணி தொடரும்

### மகேஸ்வரன் எம்.பி.உறுதிமொழி

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியின் உறுப்பினராக இருந்தாலும் தமிழ் தேசியத்துக்காக நான் முழுமூச்சுடன் பாடுபடுவேன். இதிலிருந்து நான் ஒருபோதும் பின் நிற்கப்போவதில்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் இந்துகலாசார அமைச்சரும் ஐக்கியதேசியக் கட்சியின் கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான தி.மகேஸ்வரன்.

பாராளுமன்றத்தில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் குழு ஒன்றினை ஏற்படுத்த மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திர சேகரன் முயற்சி மேற்கொண்டு வருவது குறித்து உடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கையிலேயே மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினாகளை உள்ளடக்கி கூட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படடால் அதற்கான பூரண ஒத்துழைப்பை நானும் வழங்குவேன்.

நான் 2000ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானதில் இருந்து தமிழ்த்தேசியத்துக்காகவே பாடுபட்டு வருகின்றேன்.

எனவே எனது இந்தப் பணி தொடரும் என உறுதியாக கூறி வைக்க விரும்புகின்றேன் என்றார். (உ-10)

# காதலித்த பெண்ணைக் கரம்பிடித்தமை மனதுக்கு இதமளிக்கிறது–சேவாக்

இந்திய கிரிக்கெற் அணியின் தொடக்க வீரர் வீரேந்திர சேவாக்



ஆத்தி திருமண வரவேற்பு நிகழ்ச்சி புதுடில்லி ஐந்து நட்சத்திர ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றது.

கிரிக்கெற் வீரர்கள, அரசியல் வாதிகள், உயர் அதிகாரிகள், முன்னிலை ஆடை வடிவமைப்பாளர்கள், டி.வி.நட்சத்திரங்கள் உள்ளிட்ட பலா இந் நிகழ்ச்சியில் கலந்து கொணடனர்.

மனைவி விஜேதாவுடன் ராகுல் ட்ராவிட் இந்நிகழ்ச்சிக்கு வந்த போது ஹோட்டல் முன்பு ஏராளமான ரசிகர்கள் திரண்டிருந்ததால் அவர்களைச் சமாளித்து உள்ளே செல்வதற்கு மிகவும் சிரமப்பட்டார்.

அதே போல இந்திய அணித் தலைவர் கங்குலி ரசிகர்களிடம் இருந்து தப்பித்து உள்ளே செல்லச் சிரமப்பட்டார்.

தமிழகத்தின் பாலாஜி, அஜித் அகர்கர், அனில் கும்ளே, யுவராஜ் சிங், மத்திய அமைச்சரும் டில்லி கிரிக்கெற் சங்கத் தலைவருமான அருண் ஜேட்லி, டிவி புகழ் சேகர் சுமன் உள்ளிட்டோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

முன்னதாக பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மனைவி சகிதம பத்திரிகையாளர்களைச் சந்தித்த சேவாக்,

காதலித்த பெண்ணை மணம செய்து கொண்டது சந்தோஷமாக உள்ளது. எளிமையான ூர்ததியின் குணம் எனக்கு மிகவும் பிடிக்கும் என ரத்தினச் சுருக்கமாக பேசினார்.

இதேவேளை, கடந்த வியாழக் கிழமை இரவு அருண் ஜேட்லி வீட்டில் சேவாக் திருமணம் நடைபெற்றபோது பத்திரிகையாளர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லையாதலால் அதறகு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக வரவேற்பு நிகழ்ச்சியின்போது ஏற்பாடு செய்திருந்த தேநீர் விருந்தை பத்திரிகையாளர்கள் புறக்கணித்தனர். (உ)



மேற்கிந்திய தீவுகள் அணி -இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான கிரிக் கெற் போட்டி மழைக்காரணமாக ஒத்திவைக்கப்பட்ட போது மைதானத் தற்கு வெளியே விளையாட்டு விசிறிகள்

## ஆசியக் கோப்பை ஜூனியர் போட்டி

# மலேசியாவைத் தோற்கடித்த இந்தியாவுக்கு 4வெற்றிகள்

கராச்சியில் நடைபெற்றுவரும ஆசியக் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் மலேசியாவைத் தோற்கடித்து தொடர்ந்து 4-வது வெற்றியை இந்தியா பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இவ் ஆட்டத்தில் 5-2என்ற கோல் வித்தியாசத்தில் மலேசியாவை வென்றனர் இந்திய இளைஞர்கள்.

ஆட்டத்தின் 23-வது நிமிடத்தில் பெனால்டி ஸ்டிரோக்கை நிவிர்த்தி செய்த சந்தீசிங், ஆடடத்தின் கடைசி நிமிடத்திலும் ஒருகோல் அடித்து அனைவரையும் கவர்ந்தார்.

இவ் வெறறி மூலம் 'பி' பிரிவில் இந்தியா முதலிடம் பெற்றுள்ளது. அடுத்ததாக 'ஏ' பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெறும் அணியுடன் இந்தியா விளையாடவுள்ளது.

நடப்புச் சம்பியனை கொரியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே 'ஏ' பிரிவுக்கான கடைசி லீக் ஆட்டம் விரைவில் நடைபெறவுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற மறறைய லீக் ஆட்டங்களில் சீனா 1-0என இலங்கையையும், சிங்கப்பூர் 2-1என ஜப்பானையும் தோற்கடித்தன. (உ)

## 19வயதிற்குட்பட்டோர் பிரிவு உதைபந்தாட்டம்

# யாழ்.லீக் அணியிடம் பதுளை அணி தோற்றது

(சுண்டுக்குளி)

அகில இலங்கை ரீதியில் அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால், "எவறெடி" வெற்றிக் கிண்ணத்திற்காக நடாத்தப்பட்டு வரும் 19வயதிற்குட்பட்டவர்கள் பிரிவு உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் ஓர் அங்கமாக கடந்த சனிக்கிழமை, யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற இரண்டாவது சுற்று ஆட்டம் ஒன்றில், யாழ்.லீக் அணி. அதனை எதிர்த்தாடிய பதுளை லீக்அணியை பலத்த போட்டியின்பின் 4:3என்ற கோல் கணக்கில் வென்றது.


ஆட்டம் ஆரம்பமான நேரம் தொடக்கம் வெகு விறுவிறுப்பாக இருந்த இவ் ஆட்டத்தில யாழ். அணி அதன் முதலாவது கோலை ஆட்டம் ஆரம்பமாகி 15வது நிமிடத்தில் .போட்டது. அதனைத் தொடர்ந்து பதுளை அணி 18வது நிமிடத்தில் அதன் முதல் கோலைப் போட்டது.

அதன் பின் யாழ்.அணி வெகு சிறப்பாகவும் விரைவாகவும் ஆடி 28வது நிமிடத்தில் அதன் 2வது கோலையும், 31வது நிமிடத்தில் அதன் 3வது கோலையும் போட்டது. அதேவேளை, பதுளை அணி 43வது நிமிடத்தில் பெனால்ட்டி உதை மூலம் ஒரு கோலைப்போட்டது.

இடைவேளையின் போது யாழ். அணி 3:2என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது. இடைவேளையின் பின் யாழ்.அணி 5வது நிமிடத்தில் ஒரு கோலைப்போட்டது. அதனைத் தொடர்ந்து பதுளை அணி வெகு சிறப்பாக ஆடி 8வது நிமிடத்தில் தனது 3வது கோலைப் போட்டது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் மாதுளன் கலந்துகொண்டார். (உ-110)

# விளையாட்டுச் செய்திகள்



ஆயிற்றன் செனவின் புதிய கண்டுபிடிப்பான தாமரை வடிவான வாகனத்தை ஹேர்காட் பேர்கர் செலுத்துகிறார்.

## ஆடவர் ஹொக்கிப் போட்டி

# அவுஸ்திலேயாவுக்கு வெற்றி

சிட்னியில் நடைபெற்ற 4நாடுகளுக்கு இடையிலான இரண்டாம் கட்ட ஆடவர் ஹொக்கிப் போட்டியில் எதிர்பார்த்தது போல்வே அவுஸ்திரேலியா சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

ஆனால் 3வது இடத்துக்கான ஆட்டத்தில் தென் ஆபிரிக்காவிடம் இந்தியா தோற்றுப்போனது எதிர்பாராத ஒன்றாக அமைந்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தென் ஆபிரிக்காவுடனான ஆட்டத்தில் பெரும்பாலான நேரங்களில் இந்தியப் அணியினர் ஆதிக்கம் செலுத்தினர். முதல் பாதியில் இரு அணியினராலும் கோல் போட முடியவில்லை. ஆட்டத்தின் 49-வது நிமிடத்தில் தென் ஆபிரிக்க வீரர் கிறொக் நிகோல் அடித்த கோலே வெற்றியைத் தீர்மானிப்பதாக அமைந்தது.

இதற்கு முதல் நாளான சனிக்கிழமை நடைபெற்ற லீக் ஆட்டத்தில் தென் ஆபிரிக்காவை 4-3என்ற கோல் கணக்கில் இந்தியா வென்றமை குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து 4ஆம் இடத்துக்கு இந்தியா த்ள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்பு கான்பராவில் நடைபெறற முதல் கட்டப் போட்டியல் அவுஸ்திரேலியாவிடம் 3-0எனத் தோல்வியுற்று 2ஆம் இடத்தை இந்தியா பெற்றமை நினைவிருக்கலாம்.

இந்த வெற்றியை அடுத்து நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 7-1என்ற கோல் வித்தியாசத்தில் மலேசியாவை வெற்றி கொண்டது. (உ)



லாஸ் ஏஞ்சலீஸில் சனிக்கிழமை நடைபெற்ற உலக ஹெவிவெயிட் குத்துச்சண்டைப் போட்டியில் உக்ரைன் வீரர் விதாலி கிளிட்ஸ் கோவின் (இடது) முகத்தில் ஓங்கி குத்துகிறார். தென் ஆபிரிக்கவீரர் கோரி சான்டர்ஸ் 12சுற்றுகளைக் கொண்ட இப் போட்டியில் கிளிட்ஸ்கோ சம்பியன் பட்டத்தை வென்றார்.

# ஆசியாவின் கிரிக்கெற் வளர்ச்சி 2 நாள் கருத்தரங்கு லாகூரில்

(இஸ்லாமாபாத்)

ஆசியாவில் கிரிக்கெற் வளர்ச்சி குறித்து லாகூரில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் சுனில் கவாஸ்கர், கிளைவ்லாயிட் உட்பட முன்னாள் கிரிக்கெற் வீரர்களும், சர்வதேச கிரிக்கெற் கவுன்சில் அதிகாரிகளும் கலந்துகொள்கின்றனர்.

பாகிஸ்தான் கிரிக்கெற் வாரியமும், ஆசிய கிரிக்கெற் கவுன்சிலும் இணைந்து அடுத்த மாதம் 10ஆம் தேதி தேசிய கிரிக்கெற் வளர்ச்சி குறித்து கருத்தரங்கம் ஒன்றை நடத்துகின்றது. இதில் சாகிக்ளைவ்லாயிட், சுனில் காவஸ்கர் உட்பட முன்னாள் கிரிக்கெற் ஜாமபவான்களும், சர்வதேச கிரிக்கெற் அதிகாரிகளும் கலந்துகொள்கின்றனர்.

சோபேர்ரி ரிச்சர்ட்ஸ், கிரேக் சேப்பல மற்றும் ரவிசாஸ்திரி ஆகியோர் இந்த கருத்தரங்கில் கலந்து கொள்ள சம்மதம் தெரிவித்து இருப்பதாக உள்ளூர் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிலும்,கிரிக்கெட் அவுஸ்திரேலியாவிலும் பணியாற்றும் டெட் ஆண்டர் சன் ரோஸ்டர்னா, பீட்டர் ஹென்லோன் மேத்யூ ஒகான்னல் ஆகியோருக்கு கருத்தரங்கில் கலந்து கொள்ள கருத்தரங்கு அமைப்பாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.2 நாட்கள் நடை பெறும் இந்த கருத்தரங்கில் 43 பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். இந்தியா கிரிக்கட் கட்டுப்பாட்டு வாரியம் . இலங்கை,வுங்கதேசம், ஆப்கானிஸ்தான் ,நேபால், ஹாங்காய் ,மலேசியா ,தாய்லாந்து, மாலை தீவுகள், பூட்டான், ஓமான், பஹ்ரைன், சிங்கப்பூர், குவைத், சவுதிஅரேபியா, ஈராக், புருனே ஆகிய கிரிகெட் வாரிய தலைவர்கள் கலந்து கொள்வதை உறுதி செய்துள்ளனர்.

இந்த நிலையில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் செயற்குழு கூட்டத்தை வரும்அக்டோபில் லாகூரில் நடந்த சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் சம்மதித்துள்ளது. வரும் அக்டோபர் மாதம் சிம்பாவே அணி பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொள்ள இருப்பது குறிப்பிடத்தக்கது.

# நவீன கிரிக்கெற் மைதானம் அபுதாபியில் நிர்மாணம்

அபுதாபியில் சர்வதேச ஒரு நாள் கிரிக்கெற் போட்டிகளை நடத்தக்கூடிய புதிய மைதானம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

20ஆயிரம் இரசிகர்கள் பார்வையிடக்கூடிய இநத விளையாட்டு மைதானம் 22மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த மைதானத்தில் சர்வதேச கிரிக்கெற் தகுதியை ஏற்படுத்தும் பொருட்டு இந்திய-பாகிஸ்தான் அணிகளின் பிரபல கிரிக்கெற் வீரர்கள் பங்கு மற்றும் போட்டியொன்றை எதிர் வரும் மே மாதம் 14ஆம் திகதி நடத்துவதற்கு அபுதாபி கிரிக்கெற் கட்டுப்பாட்டு சபை ஏற்பாடுசெய்துள்ளது.

இந்த கிரிக்கெற் மைதானத்தை சர்வதேச கிரிக்கெற் பேரவை அங்கீகரித்த பின்னர் தொடர்சசியாக போட்டிகளை நடத்துவதறகும் அபுதாபி கிரிக்கெற் கட்டுப்பாட்டுசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதைவேளை, சாயாவில் அமைந்துளள கிரிக்கெற் மைதானத்திற்கு அடுத்தபடியாக இந்த மைதானம் அமைகினறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-61,10)

# இன்னும் சில வருடங்களில் இலங்கையின் வளர்ச்சி நிலை!

**உலகம் ஒரு கிராமமாகச் சுருங்கிவிட்டது. தகவல் தொடர்பாடல் புரட்சியே இதற்குக் காரணம். பொருளாதாரப் போட்டியில் சில தசாப்தங்களாக பின்தங்கிவிட்ட இலங்கை ஒரே மூச்சில் இன்னும் சிலவருடங்களில் தீவிர வளர்ச்சி அடைந்து விடும் என்ற கற்பனையே இக் கட்டுரை.**

அது ஜனவரி மாதம் 2007 இலங்கையின் ஒரு ரம்மியமான நகப் புறம். தலைநகர் கொழுமபலிருந்து 50 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள இந் நகரில் நீர் வாழ்ந்து கொண்டிருக்கிறீர். உமது வேலைத்தளம் கொழும்பு நகரின் மையத்தில் அமைந்திருக்கிறது. அது ஒரு தனியார் நிறுவனம். அலுவலகத்திற்கு செல்வதற்கு 30-40 நிமிடங்கள் மட்டுமே தேவை. இதற்காக தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மின்சார ரயிலுக்குத்தான் நன்றி கூற வேணடும். ஒரு வாரத்தில் குறிப்பிட்ட சில நாட்கள் வீட்டிலிருந்தே வேலை பார்க்கும் வசதியை உமது நிறுவனம் உமக்கு செய்து தந்துள்ளது. அத்தகைய நாட்களில் ஒன்று தான் இதுவும் .

மாநாடொன்றிற்காக வெளிநாடு செல்வதற்கு உமக்கு அவசாரமாகக் கடவுச்சீட்டு தேவைப் படுகிறது. இதற்காக நீர் இலங்கை அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ வெப் தளத்தைத் தேடுகிறீர். இவ் வெப் தளத்தில் வேலைகளை வழங்கும் பல தளங்கள் உள்ளன . அதில் நீர் ஈ-சேவிஸ் எனும் பெயரிட்ட இடத்தில் தேடுகிறீர். அதில் ஒன்று குடிவரவு குடியகல்வு திணைகளத்தினுடையது. அத்தளத்தில் '' **Applying For a Srilanka Passport**" என்ற வசனத்தை ரைப் செய்கிறீர். ஒரு எளிய கிளிக் மூலம் அத்தளத்தினுள் நீர் சென்றுவிடுகிறீர். இப்பொழுது உமது கடவுச் சீட்டுக்கான விண்ணபத்தை அனுப்ப நீர் தயாராகிவிட்டீர். இதிலுள்ள " **E-From**" எனப்படும் பகுதியூடாக நீர் உமது பதிவு இலக்கத்தினை மட்டும் தருமாறு கேட்கப் படுகிறீர். இவ்விலக்கம் உமது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது. இது சில வருடங்களுக்கு முன்னர் உமது பிறப்புச் சான்றிதழுடன் இத் திணைக்களத்தினால் உமக்கு மின் அஞ்சலிலூடாக அனுப்பி வைக்கப்பட்ட இலக்கமாகும். இதனை நீர் உமது கணனியில் பாதுகாத்து வைத்துள்ளீர்.

இப்பொழுது நீர் உமது கணனித்திரையில் "பிறப்புச்சான்றிதழில் உள்ளவாறு உமது பெயரைரைப் செய்யவும்'' என்ற கட்டளையை வாசிக்கிறீர். உமது பிறப்புச் சான்றிதழின் இலத்திரனியல் படிவத்தினை நீர் திறந்து அதிலுள்ளவாறாக உமது பெயரை கடவுச்சீட்டிற்கான விண்ணப்பப் படிவத்தில் பதிவு செய்கிறீர். அடுத்ததாக உமது விலாசம் கேட்கப்பட்டுள்ளது. நீர் தற்போது உமது விலாசத்தை மாற்றிவிட்டீர். ஆனால் அதனை ஆட்பதிவு அலுவலகத்திற்கு அறிவிக்கவில்லை. அடுத்ததாக உமது தொழில் கேட்கப்படுகிறது. உடனே அங்கு தரப்பட்ட "மெனுவில்" பொருத்தமானதைத் தெரிவுசெய்கிறீர். இப்போது உமது கலர் போட்டே பிரதி ஒன்றை அதனுடன் இணைக்கவேண்டியுள்ளது. இதற்காக உமது கணனியில் சேமித்து வைக்கபபட்டுள்ள அண்மையில் எடுத்த "டிஜிட்டல் போட்டோ ஒன்றை" நீர் தேடுகிறீர். பின்னர் அதனை தேவையான இடத்தில் பொருத்துகிறீர். இலத்திரனியல் முறையில் ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்டிருந்த உமது கையொபத்தை பொருத்தமான இடத்தில் சரி செய்கிறீர். உமது கடன் அட்டை மூலம் பணம் செலுத்துவது உமக்கு ஏற்கவே பழக்கமானது. மிக எளிய முறையில் நீர் கட்டணம் செலுத்தியுள்ளீர். "சப்மிட்'' பட்டனை அழுத்திய போது உமது வேலை செய்யப்பட்டுவிட்டது.

மின்னஞ்சல்களை நீர் ஆராய்ந்தபோது உமது அலுவலகத்தின் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. வெளிநாட்டுக்குச் சென்றுள்ள உமது மேல் அதிகாரி உமக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பியுள்ளார். அதில் உம்மை தன்னுடன் வெப் கமராவினூடாகத் தொடர்புகொள்ளும்படி கேட்டுள்ளார். நீர் அவருடன் பல விடயங்கள் பற்றிக் கதைக்கவேண்டும். இதற்கு ஒருவரை ஒருவர் நேரில் பார்ப்பது போன்று உமது கணனித் திரையில அவரவர் படம் தோன்றும் வசதி உமது கணனியில் உண்டு. ஒரு நிகழ்ச்சித் திட்டமொன்றை தயாரித்து மறுநாள் தனக்கு மின்னஞ்சலினூடாக அனுப்பி வைக்கும்படி உமது மேலதிகாரி உம்மைக் கேட்டுள்ளார். இதற்காக உமது அலுவலகத்தில் இருந்து சில ஆவணங்களைப் பெறவேண்டியுள்ளது.

இதேவேளை, அலுவலகத்தில உமக்கு தரப்பட்ட பல வேலைகளும் செய்யவேண்டியுள்ளன. உமது பணியாளர்கள் செய்து முடித்த வேலைகளை நீர் மேற்பார்வையிட வேண்டியுள்ளது. தற்போது மாலை நான்கு மணியாகிவிட்டது. நான்கு மணிக்குப் பின்னர் நீர் விண்ணப்பித்திருந்த கடவுச்சட்டை உமது பிரதேசத்தில் உள்ள அஞுசல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். என திணைக்களத்தினால் உமக்கு மின்னஞ்சல் அனுப்பி வைக்கபட்டுள்ளது. அஞ்சலகம் இரவு 10 மணி வரை திறக்கப்பட்டிருக்கும். எனினும் கடவுசசீட்டு 7 மணிவரையே வழங்கப்படும். மின்னஞ்சலின் பிரதி ஒன்றை நீர் கையில் எடுத்துக்கொண்டு உமது கடவுச்சீட்டை எடுக்கவென செல்கிறீர். உமது வேலை நேரம் முடிவடைவதறகுள் ஏதேனும் செய்ய வேண்டிய வேலைகள் உள்ளதா எனப் பார்க்க விரும்புகிறீர். உமக்கு அனுப்பி வைக்கப்பட்ட கேள்விகளுக்கு நீர் பொருத்தமான தகவலை அடுத்த அரை மணி நேரத்தினுள் வழங்கிவிட்டீர்.

அஞ்சல் அதிபர் இன் முகத்துடன் காணப்படுகிறார். இது உமது காரியத்தை இலகுவாகச் செய்ய உதவுகிறது. அவர் மாலை 4 மணிக்கே வேலை செய்ய ஆரம்பித்தால் காலை போல் புத்துணர்வுடன் காணபட்டார். தற்போது நீர் வந்த காரியத்தை கூற அவர் ஒரு நொடியிலேயே தன் கணனியில் உள்ள தரவுக்கோவைகளை பார்வையிட்டு உமது கடவுச்சீட்டை அச்சுப்பதித்து எடுக்கிறார். உமது கையொப்பத்தையிட்டு நீர் அதனைப் பெற்றுக்கொள்கிறீர். இவையெல்லாம் சீக்கிரமாக முடிந்து விட்டன. இல்லாவிடி ல் நீர் கடவுச்சீட்டுப்பெற கொழும்பில் உள்ள திணைக்களத்திற்கு சென்று ஒரு நாளில் பெறக் கூடுதலான பணம் செலவிட வேண்டியிருககும். இப்போது இது தேவையில்லை.

நீர் பெற்ற கடவுச்சீட்டின் பிரதியை வேறொருவர் பெறக் கூடும் எனக் கருதினால் அஞ்சலகத்திலுள்ள கணனியில் அவற்றை உடனே அழித்துவிடலாம்.

தமது குடிமக்களின் தேவைகளை வழங்குவதற்கென 2007 இல் இலங்கை முற்றிலும் மாறிவிட்டது. குடிமக்களின் சேவைகள் அனைத்தும் அவர்களின் வாயிற்படியில் வைத்தே செய்துகொடுக்கப்படுகின்றன. இலங்கை தனது அராங்கம் மற்றும் தனியார் துறையில் பல மைல் தூரத்தை கடந்து முன்னேறிவிட்டது. குடிமக்கள் சேவைகளை பெற அரச அலுவலகங்களுக்குச் சென்று தமது நேரத்தை வீணாக்கவேண்டியதில்லை. எந்தவொரு விண்ணபத்திற்கும் இனி மேல் பிறப்புப்பத்திரம் இணைக்கவேண்டியதில்லை. எனெனில் அவை அனைத்தும் கணனியிலேயே உள்ளன்.ஆனால் மாவட்ட செயலரிடமிருந்து பெற்ற தேசிய அடையாள அட்டை மட்டுமே நீர் வைத்திருக்க வேண்டியது அவசியம. இத்தேசிய அடையாள அட்டையிலேயே உமது தனிப்பட்ட தகவல்களும் உள்ளன. இவற்றில உமது பதிவு இலக்கமும் உள்ளடக்கப்பட்டிருக்கும். இவ்விலக்கம் சகல அரசாங்கத் திணைக்களங்களிலும் இருக்கும். அதைவிட பிறப்புச் சாட்சிப்பத்திரத்தில் உள்ள அனைத்துத் தகவல்களும் உள்ளடக்கப்பட்டிருக்கும். இறுதியாக இலங்கை மக்களின் வாழ்க்கை சௌகரியமானதாக மாற்றப் பட்டுவிட்டது. பொது "இன்ரநெற்" நிலையங்கள் பல நாடு முழுவதும பரந்துள்ளன. இவை உள்நாட்டு சேவைகளை மட்டுமன்றி முழு உலக ரீதியிலும் சேவைகளை வழங்கி வருகின்றன. பொது இன்ரநெற் நிலையங்கள் அனைத்திலும் இளைய சமுதாயத்தினரே பணியாற்றுகின்றனர். உங்களுக்குவேண்டிய சேவைகளை சில செக்கன்களில் இவர்கள் பெற்றுத் தருகின்றனர். இவர்கள் தமது வாடிக்கையாளர்களுடன் நட்பாகப் பழகுகின்றனர். ஏனெனில் இங்கு வர்த்தகப்போட்டிகள் அதிகரித்துவிட்டன. அதனால் மலிவான விலையில் பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குகின்றன. பெரும்பாலான வீடுகளில் இன்நெற் இணைப்புள்ள கணனிகள் உள்ளன. இருந்தும் வாடிக்கையாளர்களைக் கவர இப்பொழுது இன்ரநெற் நிலையங்கள் பல சேவைகளை நடாத்துகின்றன. இறுதியில் இலங்கையர்கள் அனைவரும் உயர் தரத்திலான வாடிக்கையாளர் சேவைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

இங்கே அனேக வியப்பூட்டும் விடயங்கள் உள்ளன. உமக்குத் தெரிந்த ஒரு கிராமப்புறப் பாடசாலையை எடுத்துக்கொள்ளவும். சில்வருடங்களுக்கு முன் இதில் 50 மணவர்களே கற்றனர். தற்போது 500 பேர். வழமையில் 10 ஆம தரத்திற்கு வந்த மாணவர்கள் நகர்புறப் பாடசாலைகளுக்கு மாற்றப்படுவர். தற்போது இதற்கு நீண்ட தூரம செல்லவேண்டியதில்லை. கிராமப்புறப் பாடசாலைகளிலேயே 24 மணி நேரமும் 365 நாட்களும் பயன்படுத்தக்கூடிய கணனி வளங்கள் உள்ளன. சகல பாடங்களையும் இவற்றின் ஊடாக பயில முடியும். சிறுவர்கள் கணனிகளினூடு நன்கு பரீட்சயமாகிவிடுவர். இதை விட கிராமப்புறப் பாடசாலை ஆசிரியர்கள் சிறந்த வேறு பாடசாலைகளுக்கு மாறத் தேவையில்லை. பாடசாலை முடிநத பின்னர் பாடசாலையில் உள்ள கணனியிலேயே ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புஒன்றை தொடர முடியும். இவ் வசதிகள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களால் செய்து தரப்பட்டிருக்கும் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களும் இக கணனிகள் ஊடாக ஏதாவது ஒரு பாடநெறியை தொடரமுடியும். அத்துடன் விஷ்வஞான கேந்திர நிலையமும் கூட இங்கு செயற்படும். விவசாயிகள், வர்த்தகத்துறையில் பணி புரிவோர் கூட தமது வியாபாரத்தைப் பெருக்கிக்கெள்வதற்காக பாடசாலைக்கு வந்து தேவையான தகவல்களை பெற்றுச் செல்ல முடியும்.

இவையாவும் எப்படிச் சாத்தியமானது? இத்தனை வேகத்தில் இலங்கை எப்படி முன்னேறியது என்ற உலகத்தவர் மூக்கில் விரலை வைக்கின்றனர். காரணம் தெரியுமா? இலங்கையில் சமாதானம் ஏற்பட்டு ஆறு வருடங்கள் ஆகிவிட்டன.

*நன்றி தமிழ் உலகம்.*

## புலிகள் - பொது நிறுவனங்கள் இணைந்து எழுச்சி மேதினம்

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புப் பொது நிறுவனங்களுடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் மே தினத்தை எழுச்சி பூர்வமாககொண்டாட ஏற்பாடுகள் செய்து வருகின்றது.

களுதாவளை பொது விளையாட்டரங்கில் பி.ப. 3.00 மணிக்கு நடைபெறவுள்ள இந்த மேதின நிகழ்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மைப் பாராளுமன்ற உறுப்பினர் த. கனகசபை தலைமை தாங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுபபினர்களான செல்வி க. தங்கேஸ்வரி, எஸ். ஜெயானந்தமூர்த்தி தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கியஸ்தர்கள், தொழிறசங்கப் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(உ-10)


### வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
### கேள்வி அறிவித்தலிற்கான காலநீடிப்பு

2004 - 04 - 16ஆம் திகதிய பத்திரிகையின் கேள்வி அறிவித்தற் பிரசுரத்திற்கான காலம் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி - 2004 - 05 - 06, பி.ப 2.00 மணி வரை.

கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்படும் திகதி - 2004 - 05 - 07, ந.ப 12.00 மணிவரை

கேள்வி திறந்து பார்க்கும் திகதி - 2004 - 05 - 07, பி.ப 3.00 மணி.

வலிதெற்குப் பிரதேச சபை,
சுன்னாகம்,
2004 - 04 - 26

[illegible]
செயலாளர்,
வலிதெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(C/39)


## ஜப்பான் நிதியுதவி

சப்பிரகமுவ மாகாணத்தில் ஆதார வைத்தியசாலை களை புனரமைப்பதற்கு ஜப்பான் 120 மில்லியன் ரூபாவை உதவியாக வழங்கியுள்ளது.

எம்பிலிப்பிட்டிய, பலாங்கொட, ஹங்குரத்த,கருவனெல, மாவனெல ஆகிய இடங்களில் உள்ள ஆதார வைத்தியசாலைகளை முன்னேற்றுவதற்கும், புனரமைப்பதற்கும் இந் நிதியுதவி பயன்படும்.

இதேவேளை, இரத்தினபுரியில் உள்ள சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத வைத்தியசாலையின புனரமைப்புக்கும் இந நிதி பயன்படுத்தப்படவுள்ளது.(தி-63)

## விபத்தில் குடும்பஸ்தர் பலி

ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி வீதியோரத்தில் நின்றிருந்த பனையுடன் மோதியதில் அதனை ஓட்டி வந்தவர் பலியாகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் முரசுமோட்டைப் பகுதியில் இடம்பெற்ற இச்சமபவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையாரான ந.நடேசமூர்த்தி (வயது 42) என்பவரே பலியானவர் ஆவார்.

முரசுமோட்டையிலுள்ள தனது வீட்டிலிருந்து பரந்தனை நோக்கி மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றுகொண்டிருந்த போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (உ-35)


### அன்பு மாணவர்களே!
### உங்கள் வலம்புரியில்
### 28. 04. 2004 புதன் தொடக்கம்
### சுந்தரின்

**5-ம் தர புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள் வெளிவரும்.**

*மு. குறிப்பு:* வினாத்தாள்களைப் பெறவிரும்பும் பாடசாலை அதிபர்கள் மற்றும் கல்வி நிலையத்தினர்கள்,

நிர்வாக உத்தியோகத்தர்,
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

எனும் முகவரியுடன் தபால் மூலமாகவோ, அன்றி நேரிலோ தொடர்பு கொள்ளவும்.

நிர்வாக
உத்தியோகத்தர்.

# உரிய சிகிச்சைமுறையைப் பின்பற்றுவதால்

# ரேபிஸ் நோயிலிருந்து விடுபடலாமாம்!

தனியார் வைத்தியசாலை ஒனறை அடைந்த 40 வயது நோயாளி ஒருவர், வைத்தியரிடம் "ஐயோ டொக்ரர் எனக்கு ஒரே காய்ச்சல். உடம்பு எல்லாம் ஒரேவலி,ஒரே தலையிடியாயும் இருக்குது. சில வேளைகளில் பயங்கரக் கனவு எலலாம் வருகுது" என தனது முறைப்பாடுகளை அடுக்கிக் கொண்டே போனார்.

வைத்தியரும் அவரது காய்ச்சல்,உடல்நோ என்பனவற்றை கருத்தில் கொண்டு இரண்டு பரசிற்றமோல் மாத்திரைகளையும் நீரையும் வழங்கினார்-மாத்திரைகளையும் நீரையும் கண்ட நோயாளி மிரட்சி கொண்டு அதனை உட்கொள்ள தனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார். அப்பொழுது தான் வைத்தியர் நோயாளியின் நீர் வெறுப்பு நோய் பற்றி அறிந்து கொண்டார். மேலும் 3மாதங்களிற்கு முன்னர் அவரது செல்ல வளர்ப்பு நாய் இறந்தது பற்றியும்,அவரது உடம்பில் பலகாயங்கள் இன்னும் காணப்படுவதையும் அவற்றை அவரது வளர்ப்புநாய் நக்கும் பழக்கமுடையதென்பதையும் அறிந்து கொண்டார்.

பின்னர் நோயாளி உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 3நாட்களின் பின்னர் இறந்து போனார். மரண-அறிக்கைப்படி விசர் நாய்க் கடியால் பரவும் றேபிஸ் நோயாலேயே அவர் இறந்தாரென்பது உறுதிசெய்யப்பட்டது.

1996ஆம் ஆண்டிற்கு முன்னர் யாழ்.மாநகர சபை தொடர்ச்சியான ,சீராக கட்டாக்காலி நாய்களைப் (**Stray dogs**) பிடித்து அழிக்கும் செயறபாட்டைச் செய்து வந்தது. எனினும் 1996ற்குப்பின்னர் யாழ்.மாநகர சபை அவ்வாறு வினைத்திறனான முறையில் செயற்படமுடியாத துர்ப்பாக்கிய நிலயை எதிர் கொண்டுள்ளது. நாய்களைப் பிடித்து அழிக்கப்படும் கடற்கரை ஓரப்பகுதியையும், அவற்றைப் புதைககப் பயன்படும் மாநகர சபை நிலத்தையும் தமது பாதுகாப்புக் கருதி இராணுவம் கைப் பற்றி வைத்துள்ளது.பல தடவைகள் இதற்கு அனுமதிபெற முயன்ற போதும் அனுமதி கிடைக்காத நிலையில் யாழ்.மாந்கரசபை தனது செயற்பாட்டைப் படிப்படியாகக் குறைத்து, இறுதியில் நிறுத்தியுமுள்ளது.விளைவாக கட்டக்காலி நாய்கள் தொகையில் பல்கிப் பெருகி இன்று பெரும் சமுதாயப் பிரச்சினையாக உருவெடுதுள்ளது.

றேபிஸ் எனப்படுவது ஒருவகையான வைரஸால் பரவும் நோயாகும். இலங்கையில் பிரதானமாக இந்நோய் நாய்களின் மூலமே பரவுகின்றது.நாயைத்தவிர பூனை, காட்டுவிலங்குகள்,வெளவால் என்பனவும் இந்த நோயைக்காவும் இயல்புடையன.இந்த நோயின் தாக்கத்திற்கு உள்ளானவருக்கு உரிய சிகிச்சைமுறை இன்னமும் கண்டறியப்படவில்லை. எனவே இது மரணத்தை ஏற்படுத்தவல்லது. எனினும் நாய் அல்லது வேறு விலங்குக்கடிக்கு உள்ளானவர் உகந்த முன்னெச்சரிக்கை சிகிச்சை முறைகளையும், நிர்ப்பீடனத்தையும் (தடுப்பூசி) பெற்றுக்கொள்வாரெனில்,இந்தப் பயங்கர ஆட்கொல்லி நோயிலிருந்து தப்பித்துக கொள்ளலாம்.

எனவே,இப் பயங்கர ஆட்கொல்லி நோய்பற்றியும்,அது பரவும முறைகள் பற்றியும், தடுப்பு முறைகள் பற்றியும் மக்கள் விபரமாக அறிந்து கொள்வது இன்றைய சூழ்நிலையின் தேவைப்பாடு ஆகும்.

## நோய்பரவும் வழிமுறைகள்

1.நோய்த்தொற்றுதலிற்கு உள்ளான விலங்கு மனிதனைக் கடிப்பதன் மூலம் (இலங்கையில் பிரதானமாக நாய்கள்)

2.நோய் தொற்றுதலிற்குள்ளான விலங்கு மனிதனின் காயப் பகுதிகளை ,சீதப்படைகளை நக்குவதன் மூலம்.

3.மிக அரிதாக கண்மாற்று சத்திரசிகிச்சை மூலமும், வளித்துகள் மூலமும் பரவும்.

## நோயியல்

விசர் நாய்க்கடிக்கு ஒருவர் இலக்காகும் பொழுது நாயின் உமிழ் நீரிலுள்ள வைரஸ் கிருமிகள் மனிதனில் பதியப்படுகின்றன.

பின்னர் அவை படிப்படியாகப் பெருகி,மத்திய நரம்புத் தொகுதி, மூளைஎன்பவற்றை அடைகின்றன.மூளையிலே இவை மீண்டும் பெருகி நரம்புகளின் மூலம் பல்வேறு இடங்களிற்குக் கடத்தப்படுகின்றது. இந்தவைரஸ் கிருமிகள் மூளையில் இறப்பை ஏற்படுத்தக் கூடிய **ENCEPHALITIS**(என்கெபலைட் டிஸ்)நோயை உண்டு பண்ணுகின்றன.

பொதுவாக நாய்கடித்து 2 தொடக்கம் 16 கிழமை காலை வேளையில் நோய்க்குரிய குணங்குறிகள் தென்பட ஆரம்பிக்கும்.சில வேளைகளில் இதற்கு 2வருடங்கள் வரை பிடிக்கும்.

முகம்,விரல்நுனி, கழுத்து, தலை,இலிங்க உறுப்புகள் போன்ற இடங்களில் நாய்க்கடி ஏற்படின் நோய் விரைவாகவும் கால் ,கைகளில் நாய்க்கடி ஏற்படுகையில் நோய் ஒப்பீட்டளவில் காலம் தாழ்ததியும் ஏற்படும்.

## றேபிஸ் நோய்க்குரிய குணங்குறிகள்

ஆரம்ப குணங்குறிகளாக

1.நாய்கடித்த் இடத்தில் நோ (**Tingling & pain**)

2.காய்ச்சல்

3.தலையிடி

4.உடற்களைப்பு என்பன ஏற்படும்.பின்னர்,

5.மனத்தளர்ச்சி

6.பிரமைகள்(**Hallucinations**)

7.திடுக்கிடுதல்(சிறுசிறு ஒலிகளுக்கு மிரட்சி அடைதல்.)

8.நீர்வெறுப்புநோய்-**Hydrophobia**-நீரை உட்கொள்கையில் தொண்டைத் தசைகள் நோவை ஏற்படுத்தும் சுருக்கத்திற்கு உள்ளாகுவதால் நீரை உட்கொள்ள மறுத்தல்

9.காற்று வெறுப்பு நோய்-**Aerophobia**-மின்விசிறியின் சுழற்சியினால் உடலில் காற்றுப்படுகையில் தசைகள் நோவை ஏற்படுத்தக்கூடிய சுருக்கத்திற்கு உள்ளாதல். இறுதியில் வலிப்பு (**Conbulsions**) சுவாச செயலிழப்பு ( **Respiratcy panalysts**)இதயத்துடிப்பு ஒழுங்கீனம் (**Cardiac arrythmias**) ஏற்பட்டு இறப்பு ஏற்படும்.

## நோயைக் கண்டறிதல

நோயாளி ஒருவர் விசர் நாய்க்கடி நோய்க்கு (**Rabies**) உள்ளானதன் பின் அதனை கண்டறிவதால் குறிப்பிடத்தக்க நன்மை ஏதும் ஏற்படாது. எனினும் இந் நோயானது பின்வரும் வழிகளில் கண்டறியப்படும்.

1.றேபிஸ் வைரஸ் நோய்க்குரிய விசேட குணங்குறிகளை கொண்டு (நீர் வெறுப்பு ,காற்று வெறுப்பு)

2.ஆய்வுகூடப் பரிசோதனையிலிருந்து (உமிழ்நீர் மாதிரி, தோல்மாதிரி-**Skin biopsy**)

3.நோயாளி இறந்த பின்னர் பிணப் பரிசோதனையில் சில விசேட அவதானிப்புக்களிலிருந்து (**Negri body opseruation**)

## சிகிச்சை முறை

றேபிஸ் வைரஸ் நோயை உறுதிபடுத்திய பின்னர் சிகிச்சை முறையால் பலன் ஏதும் விளையாது. எனினும் மீதம் இருக்கும் நாட்களை நோயாளி சிரமம் இன்றிக்கழிப்பதற்குரிய சிகிச்சை முறைகளே மேற்கொள்ளப்படுகின்றன.

-சிறிய ஒலிகளுக்கு நோயாளி அதிகளவு மிரட்சி அடைவதால் நோயாளியை தனிமைப்படுத்தி அமைதியான இடத்தில் வைத்திருத்தல்.

- மின்விசிறியின்பாவனையைத் தவிர்த்தல்

-உடல் நோயை நோயாளி உணராமலிருக்க வலிஎதிர்ப்பு (**Pain killers**) மருந்துகளை



வழங்குதல்

-வலிப்பு(**Convulsions**) ஏற்படுமாயின் அதற்குரிய சிகிச்சைகளை வழங்குதல்

-சுவாச,இதய செயலிழப்பு ஏற் படவாய்ப்புள்ளதால் அதற்குரிய பொறி முறை உதவியை வழங்குதல்.

## வருமுன்காப்போம்

தற்போது யாழ். குடாநாட்டில் நாய்கள் எண்ணிலடங்காமல் பெருகியுள்ளதால் பொதுமக்கள் பெரும் தொல்லைக்கு உள்ளாகியுள்ளனர். கடந்த 2003 ஆம்ஆண்டில் சுமார்

## மருத்துவ விளக்கம்

2ஆயிரத்து 248 பேர் நாய்க் கடிக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டும் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர். எனினும் யாழ். குடாநாட்டில் உள்ள ஏனைய வைததிய சாலைகளிலும் ,தனியார் கிளினிக்குகளிலும் சிகிச்கை பெற்ற நாயக்கடிக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை உண்மையில் இதனை விட பல மடங்குகள் அதிகமாகும். இவற்றை விட மக்கள் நாய்க்கடி பற்றிபோதிய அறிவின்மையால் சிலர் மரபுவழி சிகிச்சைகளையும், சிலர்சிகிச்சை எதனையும் பெறாமல் உள்ளனர். இது உண்மையில் ஆபத் தான ஒன்றாகும் .எனவே இந் நோயிலிருந்து தப்பிக்க பின்வரும் யுத்திகளைக் கையாளலாம்.

## நாய்க்கடியில் இருந்து தப்பித்தல்

1. யாழ். குடாநாட்டில் இரவு வேளைகளில் (பிற்பகல் 9முதல் காலை 6 மணிவரை) கட்டாக்காலி நாய்களின் ஆதிக்கம் அதிகளவு காணப்படுவதால் அவ்வேளைகளில் பிரயாணம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளல்.

அவ்வாறு பிரயாணம் செய்ய நேரிடின் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி,கார் என்பவற்றில் செல்வதே பாதுகாப்பானது.

சைக்கிளில் செல்பவர்கள் ,பாதசாரிகள் நாய்க்கடிக்கு உள்ளாகும் சந்தர்ப்பம் அதிகமாகும்.

2. உயிராபத்து விளைவிக்கக் கூடிய விலங்குகளைப் பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய வகையில் வளர்த்தல் இலங்கைக் குற்றவியல் கோவை(பிரிவு 282 இன் படி குற்றம் ஆகையால் நாயைசெல்லப் பிராணியாகவும் பாதுகாப்பிற்காகவும் வளர்ப்பவர்கள் தமது வசிப்பிடஎல்லையைத் தாண்டாத வண்ணமோ அல்லது கட்டி வளர்ப்பதன் மூலமோ அல்லது கூடுகளில் அடை த்து வளர்ப்பதன் மூலமோ பொது மக்களுக்கு ஆபத்து விளைவிப்பதைத் தவிாத்துக் கொள்ளலாம்.

4.வைரஸ் தொற்றிற்கு நாய் அல்லது வேறு விலங்குகள் உட்படுகையில் சாதாரணமாக, கடிக்குமியல்பறற சாந்தமான விலங்குகள் கூட அதன் மூளையில் ஏற்படும் மாற்றத்தால் கோபாவேசம் கொள்ளுகின்றன. எனவே வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு தவறாது தடுப்பூசி வழங்குவதன் மூலம் இந நோயத் தொற்றலை தடைசெய்து கொள்ளலாம். இத்தடுபபூசியானது யாழ். மாநகரசபையினாலும் வேறு பிரதேச சபைகளினாலும் விலங்கு வைத்தியசாலைகளினாலும் வழங்கப்படுகின்றன.

5.உங்கள் செல்லப்பிராணிகள் நோய் அற்றதாகவும், சுத்தமானதாகவும் இருக்கலாம. எனினும் அவை தெரு/கட்டாக்காலி நாய்களுடன் பழக நேரிடின் அதற்கும் இந் நோய் தொற்றிக் கொள்ள வாய்ப்புண்டு,எனவே உங் கள் நாய்களுக்கு தடுப்பூசி வழங்கி, மாநகர சபையினால் வழங்கும் உரிமைத் தகடுகளைப் பெற்றுக் கொண்டு உரிய முறையில் பாதுகாப்பாக வளர்ப்பதே உங்களுக்கும் ஏனை யோருக்கும் பாதுகாப்பானதாகும்.

6.உங்கள் செல்லப் பிராணிகளாயினும் சரி வேறு நாய்களாயினும் அவைகளை சீண் டிப் பார்க்கும் நடவடிக்கைகளை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளல் வேணடும்.(உணவு உட் கொள்ளும் வேளையில் சீண்டல், கல்லால் எறிதல், கம்பாலடித்தல், வாலைப் பிடித்திழுத்தல்)

7.உங்கள் வீட்டிலுள்ள நாய் பிறரைக் கடிக்குமியல் புடையதெனில் வீட்டு வாசலில் எச்சரிக் கைப் பலகையொன்றை (கடிநாய் கவனம்) பார்வைக்கு விடுதல்.

8.உங்களுடலில் காயங்கள், கீறல்கள் காணப்படின் செல்லப் பிராணிகள் அவற்றை நக்குவதற்கு (**Licking**)இடமளித்தல் கூடாது.

9.உங்கள் வீட்டில் குட்டிகளை ஈனும் பெண்நாய் இருப்பின் அதற்கு கர்பபததடை முறையொன்றை விலங்கு மருத்துவரின் உதவியு டன் ஏற்படுததிக்கொள்ளல்.

10.பெண்நாய் ஒன்று காணப்படின் அதனை நாம் பெருமளவு நாய்கள் வரவாய்ப்புள்ளதால் பெண்நாய் களை உரியவகையில் கூட்டிலடைத்து வளர்க்கவேண்டும்.

11.நாய்குட்டி ஈனுகையில், அவற்றை சந்தைகளிலும் ,உணவுசாலையிலும் குப்பைத்தொட்டிகளிலும் தெருக்களிலும் அநாதரவாக விட்டுச்செலலும் பழககம் மக்களிடையே பரவலாகக் காணப்படுகிறது. இச்செயன் முறை கட்டாக் காலி நாய்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகக் காரணமாயுள்ளது. எனவே இவ்வாறு செயறபடு வதை முற்றாக நிறுத்திக் கொள்ள வேண்டும்

12.உங்கள் பிரதேசத்தில் கட்டாக் காலி நாய்கள் அதிகளவு காணப்படின் -மாநகர சபை/பிரதேச சபைகளிற்கு உரிய அறிவித்தலை வழங்கி கட்டுப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

## நாய்க்கடிக்கு ஒருவர் இலக்காகையில் கவனிக்க வேண்டியவை

1. றேபிஸ் வைரஸ் நோய்க்குள்ளான நாயானது அந்நோயின் காரணமாக கூடுதல் கோபாவேசம் கொள்கிறது. இதனால் அது மனிதா களையும் வேறு நாய்களையும் கடிப்பதன்மூலம் நோயைப் பரவலடையச் செய்கிறது.

2.றேபிஸ் வைரஸ் நோய்க்குள்ளான நாய் பொதுவாக 10 நாட்களுக்குள் மேல் உயிர் வாழாது. எனவே நாய்கடித்த 10 நாட்களுள் அது இறந்து விடின் கடித்த நேரத்தில் நாயானது றேபிஸ் நோய்த் தொற்றலுக்குள்ளானதெனக் கருதப்படும்.

## நாய்க் கடிக்குரிய முன்னெச்சரிக்கை சிகிச்சை முறைகள்

1. நாய்கடித்த இடத்தை சவர்க் காரம் ,சுத்தமான நீர் கொண்டு 15 நிமிடம் நன்றாகக் கழுவவேண்டும்.
2. பண்ணா் தொற்று நீக்கிக் கொண்டு காயத்தைக்கழுவுதல் வேண்டும்.
3. நாய் கடித்த இடத்தை மூடிக் கட்டுதல் ஆகாது.
4. ஏற்புத்தடுப்பூசி பெற்றுக் கொள் ளல் வேண்டும்.

5.10நாட்களுக்குள் நாயானது இறக்கநேரிடின் அல்லது கடித்த நாயைத் தொடர்ந்து உங்களால் அவதானிக்க முடியாமல் போகின் ,உதாரணமாக தெருநாய் ஒன்று கடிக்கும் போது விசர்நாய் கடித்தடுப் பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

6.விசர்நாய் தடுப்பூசியானது இரு வடிவங்களில் வழங்கப்படும்

1.**Ars-Anti Rabies Serum)**

கடியுண்டவரின் உடல்நிறைக் கேற்ப **Ars** எடுக்கப்பட்டு அதன் அரைபகுதி கடியுண்ட பாகத்தை கழுவும் மிகுதிதொடைப்பகுதியில் தசைகளுக்கிடையே ஊசிமூலமும் செலுத்தப்படும்.

(மிகவும் அரிதாகச்சிலர் **Ars** இற்கு ஒவ்வாமை (**Ailergy**)தாக்கத்தை காட்டுவதால் **Ars** ற்கு கடியுண்டவர் ஒவ்வாமையுண்டயவரா என்பதை சோதித்து அறிவதும் முக்கியமாகும்)

**2.Ary -Anti Rabies vaccine** இது 0,3,7,30,90,நாட்களில் தவறாது வழங்கப்படவேணடும். சிலர்நாய்க் கடிக்கு இலக்கான பின்னர் குறிப் பிட்ட நாயை அடித்துக் கொன்று விடுகின்றனர். இது நாயை அவதானிப்பதற்குரிய சந்தர்ப்பத்தை அற்றுப் போகச் செய்கிறது.


மேலும் சிலர் நாய்க்கடித்த பின்னர் உரிய சிகிச்சை முறைகளை பெறுவதைவிடுத்து சில செவிவழியான சிகிச்சை முறைகளை நம்பி (மரமஞ்சல் அவித்துக் குடித்தல் தேசிக்காய் புளி தடவுதல்) கவனயீனமாக இருத்தல். அவர்களை மரணத்திற்கு இட்டுச் செல்கின்றது.எனவே மேற்படி விடயங்களை கருத்தில் கொண்டு நடப்பதன் மூலம் கொடிய ஆட்கொல்லி றேபிஸ் நோயில் இருந்து நாம் தப்பிக் கொள்ளலாம். ★

பா. சாயிநிரஞ்சன் ,பாமதி. த
மருத்துவபீடம் 4ஆம்வருடம்
யாழ்.பல்கலைக்கழகம்

# காஞ்சி சங்கராச்சாரியார் மயிரிழையில் உயிர் தப்பினார்

(சென்னை)

சென்னை விமான நிலையத்தில் காஞ்சி ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் மயிரிழையில் பெரும் விபத்தில் சிக்காமல் கடந்த ஞாயிற்



றுக்கிழமை உயிர்தப்பினார். விமான பைலட்டின் சாதுரியத்தால் விமான ஓடுதளத்தில் புகுந்த காஞ்சி சுவாமிகளின் வாகனத்தின் மீது மோதாமல் விமானம் நிறுத்தப்பட்டது.

சென்னை மீனம்பாக்கம் உள் நாட்டு விமான நிலையத்தில் பே-26 ஓடுகளத்தில் காஞ்சி ஸ்ரீசுவாமிகள் கோயம்பூத்தூர் செல்வதற்காக ஒருதனியார் நிறுவனத்தின் சிறப்பு விமான நிறுத்தப்பட்டிருந்தது.

விமான நிலையத்தின் முதல் வாயில் வழியாக இந்த விமானத்திற்கு பொலிஸாரின் பைலட் வாகனம் மற்றும் காஞ்சி ஸ்ரீசுவாமிகள் பயணம் செய்த டெம்போ டிராவலர் வாகனம் உள்ளிட்ட இரு வாகனங்களும் பே-26 ஓடுதளத்திற்குப் புறப்பட்டுச் சென்றன. இதே ஓடுதளத்தில் ஏர் சஹாரா (எஸ்.ஏ.308) என்ற விமானம் தரையிறங்கியது.ஆனால் விமான ஓடுதளத்தில் இரு வாகனங்கள் செல்வதைக் கண்டவுடன் சுதாரித்துக் கொண்ட பைலட் சாதுரியமாக விமானத்தை நிறுத்தினார்.

இதன்பின்னரே பெரும் விபத்திலிருந்து மயிரிழையில் காஞ்சி ஸ்ரீசுவாமிகள் மற்றும் அவருடன் சென்றவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியது தெரியவந்தது.

விமானம் கீழே இறங்கும் நேரத்தில் ஓடுதளத்தில் வாகனங்கள் செலல அனுமதிக்கப்பட்டது குறித்து விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளிடம் விமானி புகார் செய்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் வி.ஐப்பிகளின் பாதுகாப்புக்குச செலலும் பைலட் ஜீப்வாகனம் அனுமதியின்றி ஓடுதளத்தில் புகுந்தது, தற்போது 3வது முறையாக நிகழ்ந்துள்ளதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்பின் கோயம்புத்தூரில் சங்கரதுளசி தேசிய கண்நோய் தடுப்பு நிறுவனத்தின் விழாவில் பங்கேற்பதற்காக காஞ்சி ஸ்ரீசுவாமிகள் தனி விமானத்தில் புறப்பட்டுச் சென்றார். (து)

# ரூபா நோட்டுக் கட்டுகளில் தாமரைச் சின்னம்

## தேர்தல் ஆணையத்துக்கு காங்கிரஸ் புகார்

(சென்னை)

ஓட்டுச் சேகரிப்பதற்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை பா.ஜ.க. தவறாகப் பயன்படுத்துவதாக காங்கிரஸ் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

சில வங்கிகளில் வழங்கப்படும் ரூபா நோட்டுக் கட்டுக்களின் மீது பா.ஜ.கவின் தேர்தல் சின்னமான தாமரைச் சின்னம் காணப்படுவதாக காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஆனந்த் சர்மா நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தொவித்தார்.

இதுதேர்தல் நடத்தை விதிகளுக்கு மாறானது என்றும் தலைமைத் தேர்தல் ஆணையம் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

(து)



பயங்கரவாதிகளின் மிரட்டலையும் மீறி ஜனநாயகத்தில் பங்கேற்கும் காஷ்மீரின் வீர மகளுடன் பெண்களும் அணிதிரண்டு கடந்த சனிக்கிழமை தேர்தல் பேரணியில் பாட்டுப் பாடிப் பிரசாரம் செய்கின்றனர்.

# ஜெயலலிதா குறித்த அவதூறு பேச்சு கருப்பசாமி பாண்டியன் மீது வழக்கு

திருநெல்வேலியில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற தேர்தல் பிரசாரக் பொதுக் கூட்டத்தில் முதல்வர் ஜெயலலிதாவை அவதூறாகப் பேசியதாக தி.மு.க. தேர்தல் பணிச் செயலர் வீ.கருப்பசாமி பாண்டியன் உள்ளிட்ட 2பேர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

திருநெல்வேலி மக்களைவைத் தொகுதி ஜனநாயக முற்போக்கு கூட்டணி வேட்பாளர் ஆர்.தனுஷ் கோடி ஆதித்தனை ஆதரித்து நெல்லை நகர் காந்தி சதுக்கத்தில் தி.மு.க. சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இந்த பொதுக கூட்டத்தில் கருப்பசாமி உரையாற்றினார்.

அவர் தனது பேச்சில்,முதல்வர் ஜெயலலிதாவை அவதூறாகப் பேசியதாகவும் தேர்தல் விதி முறைப்படி இரவு 10மணிக்கு முடிக்க வேண்டிய பொதுக் கூட்டத்தை 10.05 மணிக்கு முடித்ததாகவும் கூறி மாநகர் மாவட்ட ஜெயலலிதா பேரவையின் இணைச் செயலர் ராஜா, எஸ். முகம்மது பொலிஸில் புகார் செய்தனர். அதன் பேரில் கருப்பசாம ,தி.மு.க. பகுதிச் செயலர் பொன் மணி ஆகியோர் மது திருநெல்வேலி நகர பொலிஸார் வழக்குப் பதிந்துள்ளனர். (து)

இந்தியச் செய்திகள்

# ஜம்மு – காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்குதல்

ஜம்மு -காஷ்மீரில் மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் மெர் குமபா மக்ஸி நேற்று முன்தினம் தீவிரவாதிகளின் தாக்குதலில் உயிர தப்பினார்.

அனந்தாக் மாவட்டத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவா பேசி முடித்த போது தீவிரவாதிகள் வெடிகுண்டுகளை வீசினார்கள். இந்தத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்.

தனியார் தொலைக் காட்சி புகைப்படப் பிடிப்பாளர் உட்பட 9 பேர் காயமடைந்தார்கள்.

மக்களவைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் இம் மாநிலத்தில் இதுவரை 245 பேர் உயிரிழந்திருக்கிறார்கள் .இவர்களில் 138 பேர் தீவிரவாதிகள் .69 பேர் அப்பாவிப் பொதுக்கள் (து)

# தமிழகத்தில் யுகப்புரட்சி–மக்கள் பிரளயம்

## தி.மு.க.தலைவர் கருணாநிதி பெருமிதம்

(கரூர்)

தமிழகத்தில் ஒரு யுகப் புரட்சி, மக்கள் பிரளயம் ஏற்பட்டுள்ளதா தி.மு.க. தலைவர் கருணாநிதி கரூரில் தி.மு.க. வேட்பாளர் கே.சி பழனிசாமியை ஆதரித்துக் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

இது கரூர் தானா?கடல் கொந்தளிப்பா?எதிரே ஒருகடல் கடலுக்கு வெளியே என்னைச் சுற்றிலும் ஒருகடல்.

இப்படி வழியெல்லாம் மக்கள் கடல் .திருச்சியிலே புறப்பட்டு எந்தவாகனத்தின் உதவியும் இல்லாமல் ஆங்காங்கே தமிழ்ப் பெருமக்கள் தள்ளித்தள்ளி விட்டு கடைசியாக கரூர் வந்து சேர்ந்திருக்கிறேன். இதற்குப் பிறகும் நமமுடைய வேட்பாளர் பழனிசாமிக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டுமென்று கேட்டு, அதன் பிறகு வாக்களிப்பவர்கள் அல்ல நீங்கள். இப்பொழுதே இங்க வாக்குச் சாவடி அமைத்து வாக்களிக்கும் இயந்திரம் அமைக்கப்படுமானால் வாக்குகளை வழங்கிவிட்டு செல்லும் கூட்டமிது.

தமிழகத்தில் இன்றைக்கு ஒரு யுகப்புரட்சி,மக்கள் பிரளயம் ஏற்பட்டுள்ளது.மதச்சார்பற்ற ஆட்சி வேண்டும் என்பதற்காகவும் சமுதாயத்தில் மத நல்லிணக்க வரலாறு படைக்க வேண்டும் என்ற சூளுரையை ஏற்பதற்காகவும் மக்களிடையே ஒருபெரும் புரட்சி ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளாக பொறுத்துப் பொறுத்துப் பார்த்து அடங்கியிருந்தவர்கள், இனியும் எங்களை ஆமைகளாக, ஊமைகளாக எண்ணாதீர்கள்; நாங்கள் ஆர்த்தெழுந்து உறுமுகின்ற சிங்கங்கள் என்று எடுத்துக் காட்டுகின்ற வகையில் தமிழகம் முழுவதும் ஒரு ஆர்ப்பரிப்பு.

மத்தியில் ஒரு ஆட்சி அமைப்பதற்காக நடைபெறுகின்ற தேர்தல் இது .அதே நேரத்தில் மாநிலத்தில் நடக்கும் ஆட்சிக்கும் நோட்டீஸ் கொடுக்கும் தேர்தலாகவும் இத் தேர்தல் அமைந்திருக்கிறது என்றார் கருணாநிதி.

(து)

# மூன்றாம் கட்ட வாக்குப் பதிவு

## 136 தொகுதிகளில் நடைபெற்றது

(சென்னை)

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி,ஐக்கிய ஜனதாதள் தலைவர் ஜோர் பெர்னாண்டஸ்,மதச்சார்பற்ற ஜனதாதள் தலைவர் தேவ கௌடா,ராஷ்ட்ரிய ஜனதாதள் தலைவர் லால்பிரகாஷ் யாதவ், தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர்





மம்தா பானர்ஜியின் திரிணமூல் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி, வடக்கு கொல்கத்தா மக்களவைத் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடும் சுதீப் பத்தோபாத்யாய தாடியுடன் நடுவில் மெழுகு வர்த்தி சின்னத்துடன் கடந்த சனிக்கிழமை மாலை வாக்கு சேகரிக்கின்றார்.

உமர் அப்துல்லா, பகுஜன் சமாஜ கடசித் தலைவர் மாயாவதி, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பலா ஆகியோரின் அரசியல் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் மூன்றாவது கட்ட வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது.

உத்தரப் பிரதேசம்,மகாராஷ்டிரா,ஆந்திரப் பிரதேசம், பீஹார், கர்நாடகா,ஒரிஸா, ஜார்க்கண்ட், அஸாம், கோவா,

மணிப்பூர், ஜம்மு -காஷ்மீர் ஆகிய 11மாநிலங்களில் இனறு 136 தொகுதிகளில் வாக்குப் பதிவு நடைபெற்றது.ஆந்திரா,கர்நாடகா,ஒரிஸா ஆகிய 3மாநிலங்களின் சட்டப் பேரவைத் தேர்தலில் இரண்டாவது இறுதிக் கட்ட வாக்குப்பதிவும் நேற்று நடைபெற்றது.

தேர்தலை அமைதியாகவும், சுதந்திரமாகவும் நடத்திமுடிப்பதற்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பாதுகாப்புப் பணியில் மாநிலக் காவல் துறையினருடன் 71ஆயிரத்து 700மத்திய ரிசர்வ் பொலிஸ் படையினரும் ஈடுபடுத்தப்பட்டனர். (து)

# ரேபரேலியில் கடும் பாதுகாப்பு

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி போட்டியிடும் ரேபரேலி தொகுதியில் வாக்குச் சாவடிகளைக் கைபபற்றுதல் ,முறைகேடுகள் போன்றவை நடைபெறாமல் தடுக்க வன்முறையாளர்களைக் கண்டதும் சுட உத்தரவிடப் பட்டுள்ளது.

வாக்குப்பதிவு சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறுவதை உறுதி செய்ய இத்தகைய கடுமையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

துணைஇராணுவம் உட்பட ஏராளமான பாதுகர்ப்புப் படையினர் காவல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரேபரேலி தொகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக தனியாக ஒரு பொலிஸ் மாஅதிபர் நியமிக் கப்படடிருக்கிறார். (து)

# எங்களுக்குப் பெரும்பான்மை கிடைக்கும்

## பிரதமர் வாஜ்பாய் நம்பிக்கை

(புதுடில்லி)

தேசிய ஜனநாயகக் கூட்டணி மீண்டும் ஆட்சிக்கு வரும் என்று பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் உறுதிபடக் கூறியிருக்கிறார்.

பா.ஜ.கவின் வெற்றிவாய்ப்புக் குறித்து வெளியான கருத்துக் கணிப்புகள் பற்றி கேட்டபோது அவர் இவ்வாறு கூறினார்.

புதுடில்லியில் செய்தி நிறுவனங்களுக்கு அளித்த பேட்டியில் முதற்கட்ட வாக்குப் பதிவு தாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு இருந்தது என்றும் இதே நிலை மற்ற வாக்குப் பதிவின் போதும் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

எங்களுக்குப் பெரும்பான்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை இருகக கிறது.ஆகவே நாங்கள் கவலையடைவதற்கான காரணம் எதுவும் இல்லையென்றும் அவர் கூறினார்.

தோதலுக்குப் பின்னர் கூட்டணிக் கட்சிகளில் மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பை மறுப்பதற்கில்லை என்றும் பிரதமர் கூறினார்.

குஜராத் வன்முறைக்குப் பிறகு முஸ்லிம்கள் பா.ஜ.கட்சிக்கு ஆதரவு தெரிவிக்கவில்லையென்பதை அவர் மறுத்துள்ளார். (து)

## இன்று ஒரு தகவல்

# இல்லாமல் இருத்தல்

ஒரு பேராசிரியர் ஒரு சமயம் குரு ஒருவரைத் தேடி வந்தார். ஜப்பானிய குரு. அவரது பெயர் நான்இன். அவரிடம் பேச வேண்டும். விபரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது இவரது ஆசை. அந்த குரு ஒரு குடிசையில் இருந்தார். இந்தப் பேராசிரியர் நீண்டதூரம் நடந்து வந்து அந்தக் குடிசைக்குவந்து சேர்ந்தார்.

குரு அவரைப் பார்த்தார். "நீங்கள் மிகவும் களைப்புடன் காணப்படுகிறீர்கள் சிறிது இளைப்பாறுங்கள். உங்களுக்குத் தேநீர் தயாரிக்கிறேன். ஒரு கப் தேநீர் குடித்துவிட்டு அதன் பின் நாம் கலந்துரையாடலாம்" என்று கூறி விட்டு தேநீர் தயாரிப்பதற்காக வெந்நீர் கொதிக்க வைத்தார். அதே சமயம் பேராசிரியரையும் லேசாகக் கவனித்தார்.

ஒரு பக்கம் தண்ணீர் கொதிக்கிறது. இன்னொரு புறம் பேராசிரியரும் கொதித்துக் கொண்டிருக்கிறார். தேநீர் பாத்திரத்திலிருந்தும் சத்தம் வந்து கொண்டிருந்தது. பேராசிரியரிடமிருந்தும் சத்தம் வந்துகொண்டிருக்கிறது. ஏனென்றால் அவர் தனக்குள்ளேயே பேசிக்கொண்டிருந்தார். அதாவது இந்தக் குருவிடம் என்ன கேட்பது. எப்படிக் கேட்பது? எங்கிருந்து ஆரம்பிப்பது என்று தன்னைத்தானே தயார் செய்து கொண்டிருந்தார்.

அந்தப்பக்கம் தேநீர் தயாராகிவிட்டது. அந்தக் குரு சிரித்துக்கொண்டே இதையெல்லாம் கவனித்தார். அதற்குப் பின் ஒரு கோப்பையில் தேநீரை ஊற்ற ஆரம்பித்தார். பேராசிரியர் கோப்பையைக் கவனிக்க ஆரம்பித்தார். கோப்பை நிறைந்து வழிய ஆரம் பித்தது. "நிறுத்துங்கள்" என்று கத்தினார். "கோப் பையில் இனிக் கொஞ்சங்கூட ஊற்ற முடியாது. உங்களுக்கு என்ன ஆயிற்று?" என்றார்.

இப்போது அந்தக்குரு சொன்னார். இதே நிலையில் தான் இப்போது நீங்களும் இருக்கின்றீர்கள். நீங்களும் உங்கள் சொந்தக் கருத்துக்களாலும், எண்ணக் கோட்டைகளாலும் நிறைந்திருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் கோப்பையைக் காலி செய்யாதவரையும் நான் உங்களுகளு புதிதாக எதைக் கற்றுக்கொடுக்க முடியும்?" என்றார்.

கோப்பை நிரம்பி விட்டது. இனிமேல் கொள்ளாது என்ற விழிப்புணர்வு அந்தப் பேராசிரியருக்கு இருந்தது. ஆனால் தன்னைப்பற்றிய விழிப்புணர்வு அவருக்கு இல்லை. அவர் தனது சொந்தக் கருத்துக்கள், கோடபாடுகள், தத்துவங்கள் போன்றனவற்றால் நிரப்பப்பட்டு பொங்கி வழிந்து கொண்டிருக்கிறார்.

அதனால் அந்த குரு என்ன சொன்னார் என்றால் "நீங்கள் ஏற்கனவே அதிகம் அறிந்துள்ளீர்கள். நான் உங்களுக்கு, எதையும் கொடுக்க முடியாது என்னைத் தேடி வருவதற்காக நீங்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். வீணாகப் பிரயாணம் செய்திருக்கிறீர்கள் நீங்கள் உங்கள் கோப்பையை சிறிது காலியாக வைத்திருந்தால் நான் அதில் கொஞ்சமாவது ஊற்ற முடியும்" என்றார்.

"கோப்பையைக் காலி செய்" என்றார். "மனதைக் காலி செய்" என்று இதற்கு அர்த்தம். ஏனென்றால் அங்கே நான் என்ற ஆணவம் பொங்கி வழிந்து கொண்டிருக்கிறது. ஆணவம் அங்கே இருக்கும் வரை வேறு எதையும் கொண்டுபோய்ச் சேர்க்க முடியாது. கோப்பையைக் காலி செய் இல்லாவிட்டால் அதை வீசி எறிந்து விடு என்கிறார் ஓஷோ. கோப்பையை எறிந்து விடு என்பதன் பொருள் நான் வெறும் புறமாக இருக்கிறேன் என்ற உணர்வு கூட இல்லாமல் இருக்கவேண்டும் என்பது தான். ஒரு தடவை ஒரு சீடன் போதிதர்மரிடம் வந்தான். "குருவே! நீங்கள் என்னை வெறுமையாக இருக்கச் சொன்னீர்கள். நான் இப்போது வெறுமையானவன் ஆகிவிட்டேன். நான் இனி என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டான். போதிதர்மர் ஒரு கம்பை எடுத்தார். அவன் தலையில் அடித்துவிட்டுச் சொன்னார். "போய் அந்த வெற்றுத் தன்மையையும் எறிந்து விட்டுவா" என்று. நான் காலியாக இருக்கிறேன் என்றால் அதிலும் 'நான்' இருக்கின்றதல்லவா. அந்த நான் காலியாக இருக்க முடியாது. ஆகவே நீ வெறுமையானவன் என்று கூற முடியாது என்பது அவரது கருத்து.

நமது ஆள் ஒருவன் குருவிடம் சென்றான். "எதுவும் இல்லாமல் காலியாக வரவேண்டும் அப்போது தான் உனக்குச் சொல்லித்தருவேன்" என்றார் குரு. "அப்படித்தான் வந்திருக்கிறேன்" என்றான். "சரி... முதலில் குருதட்சணையை வை" என்றார் அவர். "அதுவுமில்லாமல் தான் வந்திருக்கிறேன் குருவே" என்றான் இவன்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# சர்ச்சைக்குரிய தேரர்களை ஏற்றி வந்த வாகன உரிமையாளருக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர், தனது வாகனத்தை சர்ச்சைக்குரிய இரு ஹெல உறுமய எம்.பிக்களை யும் பாராளுமன்றம் கூட்டி வருவதற்குப் பயன்படுத்திய தால் தனது உயிர் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருப்ப தாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இப்பேராசிரியரின் உறவினரான பாணந்துறை உள்ளூராட்சி கவுன்சில் ஜே.வி.பி. உறுப்பினர் பாராளு மன்றம் கூடுவதற்கு முதல் நாள் இரவு தனது வாகனத் தைக் கடன் வாங்கியிருந்ததாகவும் மறுநாள் இதனை ஹெல உறுமய பிக்குகளை பாராளுமன்றம் கூட்டிச் செல்லப் பயன்படுத்தியதாகவும் இவர் குற்றம் சுமத் தியுள்ளார்.

இதேவேளை, ஜே.வி.பியின் நந்தன குணதிலக எம்.பி., சபாநாயகா தெரிவின் போது, சுதந்திர முன்னணிக்கு தான் மேலதிக இரு வாக்குகளை பாராளுமன்றிற்கு கொண்டுவருவதாக உறுதியளித்திருந்தார் என்றும் மங்கள சமரவீர தான் இன்னொரு ஐ.தே.முவின் வாக்கினை டி.யூ.குணசேகரவிற்கு கொண்டு வருவதாக உறுதியளித்திருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், உள்ளூர் பௌத்த குருமாரிடையே பிரபலமானவரும் ஹெல உறுமயவின் வண. ஓலம்பே சோபித தேரரின் தனிப்பட்ட நண்பருமான பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இத்தேர்தலில் ஹெல உறுமயவின் ஆதரவைப் பெற ஏன் முயற்சிக்கவில்லை? என சுதந்திரக் கட்சியினுள்ளும் ஜே.வி.பியினரினுள்ளும் ஒரு சாரார் கேள்வி எழுப்பியுள்ளனர். (உ-6)

# தந்தை செல்வாவின் கொள்கைகளுக்கு குறுக்கே நிற்கிறார் ஆனந்தசங்கரி

## குற்றஞ்சாட்டுகிறார் ரவிராஜ் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய பங்காளிக் கட்சி தந்தை செல்வநாயகம் உருவாக்கிய இலங்கைத் தமிழரசுக் கட்சியாகும். தந்தை செல்வா உருவாக்கிய முதலாவது கட்சியின் சின்னத்தில் நாம் போட்டியிட்டோம். ஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் என்று கூறப்படுகின்ற ஆனந்தசங்கரி கடந்த தேர்தலிலே சுயேட்சையாக பூட்டுச் சின்னத்திலே போட்டியிட்டு எமக்குத் தடைபோட்டுள்ளார்.

இதற்கு எம்மால் மறுமொழி சொல்லத் தெரியாது என்பது அல்ல. ஆனால் ஆனந்தசங்கரியார் இப்போது எப்படியான நிலையில் யாரது நிழலில் இருக்கிறார் என்று என்பது யாவருக்கும் தெரியும்.குளவிக்கூடு இருக்கின்றது என்றால் நாம் அதறகுச் சரியான முறையில தான் கல்லெறிய வேண்டும். கல்லெறிந்து விட்டு குளவி குத்திவிட்டது என்று குளறுவதில் பிரயோசனம் இல்லை.



நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் இவ்வாறு குறிப்பிட்டார்.

கட்சித்தலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தலைமையில் இடம்பெற்ற இந்தக்கூட்டத்தில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இன்று கூட, ஆனந்தசங்கரி எங்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுப்பதில் முழு நேரமாக ஈடுபட்டுவருகின்றார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்திற்கு நாம் போகக்கூடாது எனத் தடை விதித்துத்துள்ளார். நாம் கடந்த தேர்தலில் வேறு ஒரு கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டோம் என்றும், எமக்கு அங்கே போவதற்கு உரிமை இல்லை என்றும் கூறி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்குக் கடிதம் அனுப்பியுள்ளார். எமக்கும் பிரதி வந்தது.

தந்தை செல்வாஅகம் இன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளது. எனவே, நாம் இனியும் தாமதியாது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகளைப் பலப்படுத்த வேண்டும். அண்மையில் நாம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்தோம். அவர் தனது மதிநுட்பம் மிக்க ஆலோசனைகளை எமக்கு வழங்கினார். புனிதமான கொள்கைக்காக நாம் செயற்படவேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

சபாநாயகர் தெரிவின் போது அரசுக்கு எமது அதிருப்தியைக் காட்டவே நாம் எதிர்த்து வாக்களித்தோம. அரசின் பங்காளியாக நாம் என்றுமே மாற மாட்டோம். எமது கொள்கையிலும் இலட்சியத்திலும் மிகவும் உறுதியாகவும் பலமாகவும் இருக்கின்றோம்.

மேலும் இன்றைய எமது நிலையில் நாம் யாருக்குமே உதவி செய்ய முடியாது என்பதே யதார்த்தமாகும். இதனை விடுத்து நாம் பொய்யான வாக்குறுதிகளை வழங்கத் தயாராகவில்லை. சந்திரிகா அம்மையார் யதார்த்தத்தைப் புரியாது 30 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவேன் என்று கூறுகின்றார். இதற்கான நிதியை அவர் எங்கே கண்டுபிடிப்பார்?

தமிழ் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்த எத்தனையோ சக்திகள் முனைப்பாக ஈடுபட்டுவருகின்றன. இவ்வேளையில், நாம் மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும் என்றார். (உ-16)

## இராசி பலன்

**27.04.2004**

**(சித்திரை 15, செவ்வாய்கிழமை)**
**ஸப்தமி காலை-7.15 வரை**
**பூசம் பின்னிரவு 1.22வரை**
**இராகுகாலம் 2.58-4.28 வரை**
**சுபநேரம் 10.29-11.59 வரை**

**மேடம்**
மாதா சுகம், மனச்சஞ்சலம், புதிய கருமம், காரிய தாமதம்.

**இடபம்**
பிரயாண நன்மை, உறவினர் சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், போசன நன்மை.

**மிதுனம்**
கோபப்படுதல், முயற்சி தாமதம், பிரயாணம், அதிக செலவு.

**கடகம்**
சிந்தனை மிகுதி, வாக்கு மேன்மை, புதிய முயற்சி, குடும்ப மகிழ்ச்சி.

**சிங்கம்**
காரய அலைச்சல், திடீர் நன்மை, பணவிரயம், நண்பர்கள் வெறுப்பு.

**கன்னி**
எடுத்த கருமங்கள் கைகூடும், தொழில் வருமானம், குடும்ப மகிழ்ச்சி, கீர்த்தி.

**துலாம்**
தொழில் மேன்மை, நல்லமுயற்சி, உற்சாகம், போசன சுகம்.

**விருச்சிகம்**
சரீரப் பிரயாசை, அபகீர்த்தி, இடமாற்றம், எதிர்பாராத செலவு.

**தனுசு**
பிறருக்கு உதவுதல், கலகம், ஆரோக்கியக் குறைவு, காரிய தாமதம்.

**மகரம்**
களஸ்திர நன்மை, கலந்துரையாடல், செய்தொழில்விருத்தி, விருந்துபசாரம்.

**கும்பம்**
சத்துரு ஜெயம், காரிய சித்தி, பெருமையடைதல், நண்பர்கள் சந்திப்பு.

**மீனம்**
வியாபார நன்மை, அமைதிக்குறைவு, காரிய தாமதம், பணக்குறைவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

*வளவன்*

# கொழும்பு நகரில் டெங்கு அபாயம்

(கொழும்பு)

கொழும்பு நகரிலும், அதனை அண்மித்த பகுதிகளிலும டெங்குச் காய்ச்சல் ஏற்படக்கூடிய அபாயம ஏற்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

கொழும்பு நகரை அண்மித்த பகுதிகளில் கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான காலப்பகுதியில் 151பேர் டெங்குக் காய்ச்சலுக்கு இலக்காகியுள்ளனர்.

கடந்த ஆண்டும் இதேகாலப்பகுதியில் 83 பேர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றனர்.

சுகாதார அதிகாரிகளின் இவ் எச்சரிகையினை அடுத்து, அடுத்த மாதம் 9ஆம திகதி முதல் கொழும்பு நகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் இந் நோய்த் தடுப்புத்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட வுள்ளன. (கி-63)

செய்தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். -குறள்

வலம்புரி

# ஜே.வி.பியின் நிலைப்பாடு என்ன?

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக நோர்வே அரசிற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் அழைப்பை நோர்வே அரசு ஏற்றுக்கொண்டுள்ளபோதிலும், சமாதானப் பேச்சுக்களை தொடர்வதற்கான சமமதத்தை விடுதலைப் புலிகளும் தெரிவிப்பதன் மூலமே சமாதான முயற்சிகள் உருப்பெற முடியும்.

இவ்வாறு சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதற்கு விடுதலைப்புலிகளின் சம்மதத்தைப் பெறவேண்டுமாயின் புதிய அரசு தொடர்பில், அதனது சமாதான முயற்சிகள் விடயத்தில், விடுதலைப் புலிகளுக்கு இருக்கக்கூடியதான சந்தேகங்களை தெளிவு படுத்தவேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கும், நோர்வே அரசிற்கும் உண்டு. இது ஒருபுறம். மறுபுறத்தில் ஜனாதிபதியின் சமாதான முன்னெடுப்பு என்பது அவரின் கையில் மட்டும் இல்லை என்ற உண்மையும் உணரப்படவேண்டியது ஒன்றாகும்.

அதாவது ஜனாதிபதி சந்திரிகாவின் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் அரசு என்பது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி ஆகியவற்றின் இணைப்பினால் உருவானது. எனவே சமாதான முயற்சி என்பது ஜனாதிபதியின் விருப்புடன் மட்டும் நடைபெறக்கூடியதல்ல. அவ்வாறு சமாதான முயற்சிகள் நடைபெற்றாலும் கூட, அங்கு எட்டப்படும் முடிவுகள் அமுலாகுவதற்கு ஆட்சியில் இருக்கக்கூடியதான ஜே.வி.பியினது ஆதரவும் அவசியமாகும்.

ஆனால் சமாதான முயற்சியில் நோர்வேக்கு விடுக்கப்பட்ட அழைப்பில் ஜே.வி.பியின் நிலைப்பாடு என்ன? என்ற கேள்வி எழவே செய்கிறது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசும், விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்து புதிதான ஒப்பந்தம் செய்யப்பட வேண்டுமென தேர்தலுக்கு முன்னதாகவே ஜே.வி.பி கூறிவந்துள்ளது. அத்தோடு, இலங்கையின் உள்விவகாரங்களில் நோர்வே தலையிடுவதை அனுமதிக்கமுடியாதெனவும் கூறி வந்துள்ளது.

இவற்றுக்கு மேலாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் கூட்டுச் சேர்வதில் ஏற்பட்ட தடங்கல்கள், தடைகளுக்கு சமாதான முயற்சியில் ஜே.வி.பி.கொண்ட வெறுப்புத்தனமும், அதிகாரப்பரவலாக்கலை ஏற்றுக்கொள்ளாமையே காரணமாக விருந்தது. எனினும் ஏதோவொரு வகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் கூட்டுச்சேர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை உருவாக்கியது.

இங்கு கூட்டுச்சேரும் விடயத்தில் ஜே.வி.பி. தனது நிபந்தனைகள், கொள்கைகளைக் கைவிட்டதா? அல்லது ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இணைந்து போனதா? என்பது தெரியாத நிலையில், சமாதான முயற்சிக்கு அனுசரணையாளராகச் செயற்படுமாறு ஜனாதிபதி விடுத்த அழைப்புக்குறித்து ஜே.வி.பி. மௌனம் சாதிக்கின்றது.

ஜே.வி.பியின் இம் மௌனம் சமாதானத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களுக்கு ஒருவித ஐயத்தை உண்டுபண்ணியுள்ளது. ஆட்சிப்பீடத்தில் இணைந்துள்ள ஒரு கட்சி - ஆட்சிப்பீடத்திற்கு வரமுன்னர் இனவாத நோக்கில் சமாதானத்தை எதிர்த்த நிலையில் இப்போது மௌனம் சாதிப்பது அக்கட்சியின் கபடநோக்கமாகவே இருக்கிறது.

எனவே சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக் வாக்களித்த மக்களை மதிக்கவேண்டுமாயின் - மீண்டும் இதே வாக்காளர்களிடம் போகவேண்டிய சூழ்நிலையுண்டு என்பதை ஏற்றுக்கொண்டால் சமாதான முயற்சியில்ஜே.வி.பி தனது நிலைப்பாட்டைத் தெட்டத்தெளிவாக வெளிப்படுத்த வேண்டும். இது ஆட்சியில் இருக்கக்கூடியதான ஓர் பொறுப்பு வாய்ந்த கட்சியின் முக்கிய கடமையாகும்

எனவே சமாதான முயற்சியில் ஜே.வி.பி. தனது தெளிவான நிலைப்பாட்டை மக்கள் முன் வைக்கவேண்டும்.

# நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை வீழ்ச்சிக்கு பொறுப்பற்ற ஜனாதிபதிகளே காரணமாயுள்ளனர்

## அரசியல் ஆய்வாளர் எஸ். சோதிலிங்கம் கருத்து

(யாழ்ப்பாணம்)

எமது நாட்டின் ஜனாதிபதிகள் தமக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களை நல்ல காரியங்களை ஆற்றுவதற்குப் பயன்படுத்தாது அவற்றைத் துஷ்பிரயோகம் செய்து வருகின்றமையை இலங்கையில் உள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டிய தேவையை உருவாக்கியுள்ளதாக அரசியல் ஆய்வாளர் எஸ். சோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியல் யாப்புப் பற்றி தேசிய ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியின் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையின் அரசியல் வரலாற்றிலே கோல்புறூக் அரசியல் சீர்திருத்தம் முதலாவது ஆகும். இதில் பாராளுமன்றப் பிரதிநிதிகள் வாக்கெடுப்புகள் மூலமாக தெரிவுசெய்யப்படாது இனரீதியாகவே தெரிவுசெய்யப்பட்டனர். இதில் இருந்த குறைபாடுகளால் 1912 ஆம் ஆண்டு குறூமக்கலம் அரசியல் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதுதான் இலங்கையில் முதல் முதலாக தேர்தல் முறையை அறிமுகப்படுத்தியது. எனினும் சொத்துடையவர்களும் கல்வி அறிவுடையவர்களுமே வாக்களிக்கலாம் என்ற நிலை காணபபட்டது. இதனால் ஏற்பட்ட சர்ச்சையைப் போக்குவதற்கு 1921 ஆம் ஆண்டு மானிங் என்ற அரசியல் சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது.

### பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம

இதில்தான் முதல் முதல் பிரதேசவாத பிரதிநிதித்துவ முறை கொண்டுவரப்பட்டது. பின் 1924 ஆம் ஆண்டு மானிங் விமன்சே அரசியல் சீர்திருத்தம் ஏற்படுத்தப்பட்டது.இது புதிய விடயங்களை அறிமுகப்படுத்தாவிட்டாலும் ஏற்கனவே செய்யப்பட்டிருந்த சீர்திருத்தங்களை ஒழுங்குபடுத்தியது.

இவற்றில் இருக்கும் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பு கொண்டு வரப்பட்டது. இதுதான் இலங்கை அரசியலில் இலங்கையர்களுக்கு அரைவாசி பொறுப்பையாவது கொடுத்தது.சர்வஜன வாக்குரிமையை மக்களுக்கு வழங்கியது. இதுவே மக்கள் நலன் பேணும் அரசியலை இலஙகையில் முதல் முதல் அறிமுகப்படுத்தியது. அரசியல் கட்சிகளது தோற்றத்திற்கு வழி வகுத்ததும் ஆகும்.

இதன்பின் 1947 ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் யாப்பு அமுலுக்கு வந்தது. 1948ல் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரும் சுதந்திர அரசியல் யாப்பாக இதுவேயிருந்து வந்தது. பின்னர் 1972 முதலாவது குடியரசு அரசியல் யாப்பும் 1978ம் ஆண்டு இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பும் கொண்டுவரப்பட்டன.

இலங்கையர்களாலேயே இலங்கைக்கு என முதல் முதல் உருவாக்கப்பட்ட யாப்பு என்ற பெருமையை 1972 ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்த யாப்பு கொண்டுள்ளது.

### பிரித்தானியாவுக்கு சிறப்புரிமைகள்

இதற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட அரசியல் யாப்புக்களில் பிரித்தானிய அரசிற்கு பல சிறப்புரிமைகள் காணப்பட்டன. இது ஒரு சுதந்திர நாட்டிற்கு எற்புடையது அல்ல. இதனால் அவர்கள் அரசியல் ஆதிக்கத்தை முற்றாகக் களைந்து சுதந்திரமான அரசியல் திருத்தங்ளை கொண்டிருத்தது இவ் அரசியல் யாப்பே.

இதனால் இலங்கை ஓர் குடியரசாக மாற்றப்பட்டதுடன் மக்கள் ஆட்சியென்ற ஜனநாயக ஆட்சி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம் மக்களின் ஆணையுடன் அமைக்கப்படும் அரசாங்கம் அதி உயர் அதிகாரங்களுடன் காணப்பட்டது.

எனினும் இந்த யாப்பின் மூலம் சிங்களம் அரச கரும மொழியாக்கப்பட்டு அதற்கு அரசியல் அந்தஸ்த்தும் வழங்கப்பட்டது. இது இலங்கையில் பாரியதொரு அரசியல் விளைவை உருவாக்கியது. இதனாலேயே தமிழர்கள் தனிநாடு கோரிப் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

காரணம் இவ்யாப்பின் மூலம் சிங்களம் அரச கரும மொழியாக்கப்பட்ட அதே நேரம் தமிழ்மொழியின் உபயோகத்திற்குக் கூட அரசியல் யாப்புரிமை மறுக்கப்பட்டது. அத்துடன் சிறுபான்மையினருக்கிருந்த காப்புரிமைகள் மறுக்கப்பட்டன. எனவே, இவை அனைத்தும் சேர்ந்தே இன முரண்பாடு, தனிநாடு என்ற பெயர்களில் வன்முறைகளைத தோற்றுவித்தன.

பாராளுமன்ற ஆட்சிமுறையை அமுல்படுத்திய யாப்பாக இது காணப்பட்டாலும் வெற்றியளிக்காது போய்விட்டது.

### துரித திட்டங்கள்

இந்தவகையில், இவ் யாப்பை ஏற்படுத்திய ஜே.ஆர். ஜெயவர்த்தன நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரை வைத்திருப்பதன் மூலமே நாட்டில் துரித திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம் என எண்ணியிருந்தார். இதற்கமைவாகவே 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பை மாற்றி 1978 ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பைக் கொண்டுவந்திருந்தார்.

ஆனால், இந்த யாப்பு ஜனாதிபதிக்கு மட்டற்ற அதிகாரங்களை வழங்கி சர்வாதிகாரமாக ஆட்சி நடத்தும் அதிகாரத்தை ஏற்படுத்தியதால் இந்த யாப்பு ஜனநாயக ஆட்சி முறையை சாத்தியப்பாடுடையதாக நடைமுறைப்படுத்த வாய்ப்பளிக்கவில்லை.

இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, நாடாளுமன்ற அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டவராக இருக்கும் ஜனாதிபதியே அமைச்சரவைக்குத் தலைமை தாங்குபவராகவும் இருக்கிறார். எனினும் அமைச்சரவை மீது நம்பிக்கையீனம் ஏற்படும்போது அதனைக் கலைத்தாலும் அதற்குத் தலைமை வகிப்பவராகவும் பொறுப்பாளியுமான ஜனாதிபதி மீது தொடர்ந்தும் நம்பிக்கை வைத்து அவரைப் பதவியில் வைத்திருப்பது ஏற்புடையது அல்ல. ஏனெனில், அமைச்சரவை மீது நம்பிக்கையீனம் ஏற்பட்டதற்குப் பொறுப்பானவர் ஜனாதிபதியே காரணம் என்ற பொருள்படுகிறது. எனினும், எமது நாட்டு அரசியல் யாப்பு இதனை கருத்தில் கொள்ளாது அமைக்கப்பட்டுள்ளது. எனினும் இவ் ஜனாதிபதி முறைமையானது நாட்டு மக்களுக்கு பலவிதமான நன்மைகளையும் தரக்கூடியாதாகக் காணபபடுகிறது. அதாவது நாடாளுமன்ற அதிகார வரம்புகளுக்கு அப்பால்பட்ட அதிகாரங்கள் உள்ள ஜனாதிபதி அரசாங்கம் கவனம் எடுக்கத் தவறிய கடமைகள் மீதும் பாராளுமன்றத்தினைக் கட்டுப்படுத்தி நடைமுறைப்படுத்த முடியாத மக்கள் நலமேம்பாடுகள் மீதும் கவனம் செலுத்தி கடமைகளை ஆற்றவேண்டும் என்பதற்காகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை கொண்டு வரப்பட்டது.

### ஜனாதிபதிகளின் தவறு

ஆனால் இதனை சரியான முறையில் பயன்படுத்த தவறும் ஜனாதிபதிகள் தமது அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காகவும் தன் விருப்பத்திற்குப் புறம்பாக செயற்படும் அரசாங்கத்தினை ஆட்டிப் படைப்பதற்காகவும் தமக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி துஷ்பிரயோகம செய்வதுடன்.

பிரதமர் மற்றும் அமைச்சர்கள் இணைந்த அரசாங்கத்தை ஆட்டம் காணவைப்பதால் நாட்டில் பல அரசியல் நெருக்கடிகள் உருவாகின்றன.

இவற்றைத் தவிர்ப்பதற்காகவே இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்திலிருந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டிய தேவை தற்பொழுது உருவாகியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ - 4,60,63)

# அகாஷி தலைமையிலான குழு வெள்ளியன்று கிளி. செல்கிறது

(கொழும்பு)

இலங்கைக்கான ஜப்பானின் விஷேட பிரதிநிதி யசூசி அகாஷி இவ்வாரத்தின் பிற்பகுதியில் இலங்கைக்கு வருகை தரவுள் ளார்.



இதேவேளை, எதிர்வரும வெள்ளிக்கிழமை அகாஷி தலைமையிலான குழுவினர் கிளிநொச்சி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக ஜப்பானிய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சந்திப்பின் போது சமாதான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (உ - 12)

# தினசரி தியானம்

## ௐ விவேகச் சிந்தனைகள்

பூனையானது தனது குட்டிகளைப் பற்களால் பிடிக்கும் போது அக்குட்டிகளுக்குத் தீங்கு உண்டாவதில்லை. ஆனால் அது ஓர் எலியைப் பிடிக்குமானால் அவ்வெலி உடனே இறக்கிறது. இதைப்போல மாயையானது மற்றவர்களை வருத்துவதாயினும் பக்தனை ஒருபோதும் துன்புறுத்தாது.

*சுவாமி விவேகானந்தர்*

# கடத்தப்பட்ட செய்தியை மறுக்கிறார் ஹெல உறுமய எம்.பி

(கொழும்பு)

ஹெல உறுமய குற்றஞ்சாட்டுவதைப் போல, தான் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் கடத்திச் செல்லப்படவில்லை. ஹெல உறுமய எம்.பியான வண கதலுவே ரதனசிக தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2வாரங்களாக தான் 8விகாரைகளுக்கு விஜயம் செய்திருந்ததாகவும் தனது வழமையான தங்குமிடமான மொரட்டுவ சம்புத்த விகாரையிலேயே தான் தங்கியிருந்ததாகவும் கூறியுள்ள அவர் தன்னை ஒரு ஐ.ம.சு.மு. பாராளுமன்ற உறுப்பினர்களும் தூண்டவில்லை என்றும் தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும், தான் திகதியிடப்படாத இராஜிநாமாவை சமர்ப்பித்ததாக வெளியாகிய செய்தியை மறுத்த தேரர் தான் எப்போதும் ஹெல உறுமயவிலேயே இருப்பேன் என்றும் தன்னை இடைநிறுத்த ஹெல உறுமய நடவடிக்கை எடுத்தால் தான் நீதிமன்றிற்கு செல்வேன் என்றும் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

தர்மராஜ்ஜியம் ஒன்றை உருவாக்குவதற்குத் தம்மை ஹெல உறுமயவினர் அர்ப்பணித்து அதில் அவர்கள் விசுவாசமாக செயற்படுவார்களாயின் அவர்கள் சரியாகவே செயற்பட்டிருப்பார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ -6)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட் களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916 0777 801038
கொழும்பு: T.P.: 2390128 Fax: 2399650 Mob: 0777 517019

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 222 3214
E.mail: smskr@eureka.lk

# நோர்வேத் தூதுக்குழுவினர் அடுத்தவாரம் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் மீண்டும் அனுசரணையாளர்களாகச் செயற்படுமாறு ஜனாதிபதி நோர்வேயை அழைத்ததைத் தொடர்ந்து, நோர்வேயின் உயர்மட்டத் தூதுக்குழுவினர் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளனர்.

நோர்வேப் பிரதி வெளி விவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தலைமையிலான இத்தூதுக்குழுவில் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்மும அடங்குவார்.

இக்குழுவினர் அரசாங்கத்துடன பேச்சுக்களை நடத்துவர். அத்துடன் ஹெல்கீசன் கிளிநொச்சி சென்று புலிகளின் தலைவர்களையும் சந்திப்பார்.

இதேவேளை ஐ.தே.மு அரசாங்கத்தைப்போல் அல்லாமல் ஐ.ம.சு.மு அரசாங்கம் சமாதான செயற்பாடுகளில் எதிர்க்கட்சியையும ஏனைய கட்சிகளையும் தொடர்பு படுத்தப் போவதாக தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் அழைப்புக்கு பதிலளித்த நோர்வே அதிகாரிகள் புலிகளும இத்தகைய வேண்டுகோளை விடுத்தால் மாத்திரமே தாம் உதவிபுரியச் சம்மதிப்போம் எனத் தெரிவித்தனர். இதேவேளை பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது பற்றி சமாதான ஏற்பாட்டாளர்கள உத்தியோகபூர்வமாகத் தொடர்பு கொள்ளும் வரை காத்திருக்கிறோம் என புலிகள் அறிவித்துள்ளனர். அததுடன் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அங்கீகரித்தால் மட்டுமே அரசுடன் எதிர்காலத்தில் பேசுவோம் என்றும் புலிகள தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-6)

# விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(பருத்தித்துறை)

லான்மாஸ்ரரும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிர இழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று உடுப்பிட்டி பலநோக்குக கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் இறந்தவர் நேற்று மாலை வரை அடையாளம காணப்படவில்லை.

இவரை அடையாளம் காணும் பொருட்டும் மரண விசாரணைக்காகவும், சடலம் பருத்தித்துறை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-52-150)

# ரயில்வே அதிகார சபையை கலைக்கக் கோரிக்கை

(கொழும்பு)

ரயில்வே அதிகார சபையைக் கலைத்து விடும்படி ஐக்கிய ரயில்வே தொழிற்சங்கம் கூட்டணி அரசாங்கத்திடம் வேண்டுகோள விடுத்துள்ளது.

தேர்தல் பிரச்சார காலத்தின் போது அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளுக்கமைய 3மாத காலத்தினுள் ரயில்வே அதிகார சபையை கலைத்துவிடுமாறு ஜனாதிபதிக்கும்போக்குவரத்து அமைச்சுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும், தொழிற்சங்கங்களும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின அடிப்படையில்ரயில்வே அதிகாரசபையின நடவடிக்கைகள் இரு வருடகாலத்திற்கு இடைநிறுத்தப் பட்டுள் ளன. இனிவரும் காலங்களில் ரயில்வே அதிகாரசபையின பணிப்புரைகளை ரயில்வே அதிகாரிகள் நிறைவேற்ற மாட்டார்களென தொழிற்சங்க ரயில்வே கூட்டணியின் அமைப்பாளர் கே.பி. ஜயசேன தெரிவித்துள்ளார்.

ரயில்வே ஊழியர்களின் தற்போதைய கோரிக்கைகள நிறைவேற்றப் படாது விட்டால், தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும தெரிவித்துள்ளார். (தி6)

# குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவிற்கான ஒருங் கிணைப்புக குழுக் கூட்டம் இன்று மு.ப 11 மணியளவில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இடம் பெற்றுள்ளது.

அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்புப் பற்றிய விடயங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ள இக்கூட்டத்தில சம்மந்தப்பட்டவர்களை தவறாது கலந்து கொள்ளு மாறும கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.(4)

# தந்தை செல்வாவின் சமாதிக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா அறங்காவல குழுவின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை தந்தை செல்வாவின் 27ஆவது சிரார்த்த தினம் தொடர்பான மலரஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

அறங்காவல் குழுவின் தலைவர் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ந. ரவிராஜ், எம்.கே. சிவாஜிலிங்கம், மா.க. ஈழவேந்தன், செ. கஜேந்திரன், சிவநேசன், மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவமகாராஜா ஆகியோர் தந்தை செல்வாவின் சமாதிக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து அறங்காவல் குழுவின செயலாளர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், தந்தை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் இரா தென்னரசு, தந்தையின் முன்னாள் அபிமானிகளான பூமா. செல்லத் துரை, வே.வினாசித்தம்பி, சி. அரசரத்தினம், பண்டிதர் செ. சச்சிதானந்தம உட்படப் பலர் மலரஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர். (தி-16)

# இரண்டாம் தவணை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

க.பொ.த. (உ/த) பரீட்சை நிலையங்களாகப் பயன்படுத்தப்படாத சகல அரசாங்க தமிழ் சிங்களப் பாடசாலைகளும் இன்று செவ்வாய்க்கிழமை இரண்டாம் தவணைக்காகத் திறக்கப்படவுள்ளன.

இப்பாடசாலைகள் யாவும் எதிர வரும் ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதியுடன் இரண்டாம் தவணை விடுமுறைக்காக மீண்டும் மூடப்படவுள்ளன.

க.பொ.த. (உ/த) பரீட்சை நிலையங்களாக இயங்கவுள்ள பாடசாலைகள் யாவும் கடந்த 19ஆம் திகதி 2ஆம் தவணைக்காகத் திறக்கப்பட்டமை தெரிந்ததே.

க.பொ.த(உ/த) பரீட்சை எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதால், இப்பாடசாலைகள் எதிர்வரும் மே மாதம் முதலாம்திகதி முதல் ஜூன் மாதம் 2ஆம் திகதிவரை மூடப்பட்டிருக்கும்.

இப்பாடசாலைகளின் இரண்டாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் ஜூன் மாதம் 3ஆம் திகதிமுதல் ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி வரை இயங்கும் என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி- 63)

# காஞ்சிபுரம் தொண்டை மண்டல குருமகா சந்நிதானம் யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாடு காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீன குருமகா சந்நிதானம் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

இன்று முழுநாளும் நல்லை ஆதீனத்தில் தங்கியிருக்கும் சுவாமிகள் நாளைக் காலை நயினாதீவுக்குச் செல்வார்கள்.

ஆதீனத்தில் தங்கியிருக்கும் நேரத்தில் அடியார்கள் அவரைத் தரிசிக்க முடியும். நாளை மாலை சுவாமிகள் கொழும்புக்குப் பயணமாகவுள்ளார். (த)

## சிறையில்....

கிழக்கில் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடைபெறும் பட்சத்தில் கைதிகள் பலர் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

அதிரடிப்படையினர் தன்னை தடுத்துவைத்திருந்த முகாமையும், முகாமினுள் தமிழ் இளைஞர்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ள இடங்களையும் தன்னால் காட்ட முடியும் என மனித உரிமை ஆணைக குழு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றிற்கு தெரிவித்துள்ள முறைப்பாட்டில் அவர் தெரிவித்துள்ளார். (த)

## குருநாகலில்....

களப்பு அரசியல் துறை பொறுப்பாளர் எனவும் அவர் தற்போது விடுதலைப்புலிகள் அமைப்பில் சரணடைந்திருக்கிறார் எனவும் தகவல் வெளியாகி உளளது.

இந்நிலையில் குண்டுவெடிப்பில் இறந்தவர் யார் என்பது புரியாத நிலையிலேயே இருப்பதாவும் அநேகமாக இறந்தவர் கருணா குழுவைச் சேர்ந்த பிள்ளையான் என்பவராக இருக்கலாம் எனவும் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள பொலிசார் பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். (இ)

(மற்றொரு செய்தி 3ம் பக்கத்தில்)

## தலை மின் .....

கொண்டிருக்கையிலேயே இத் துயரச் சம்வம் இடம்பெற்றுள்ளது.

சிறுமியின் சடலம் மரண விசாரணையின் பொருட்டு பருத்தித துறை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-ச-52,150)

## பிரதி .....

சிபாரிசு செய்வதற்கு அக்கட்சி தீர்மானித்துள்ளது.

பிரதிச் சபாநாயகர் பதவிக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பாக ஒருவரின் பெயரை சிபாரிசு செய்வதற்கு ஐக்கிய தேசியக்கட்சி இணக்கம் தெரிவித்ததையடுத்தே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உயர்பீடம் கூடி பாராளுமன்ற உறுப்பினர் முத்து சிவலிங்கத்தின் பெயரை சிபாரிசு செய்வதற்குத் தீர்மானித்துள்ளது. (உ-10)

## இனந்தெரியாதோர் துப்பாக்கிச் சூடு.......

ரங்களும் தாக்குதல் நடத்தியோரால் சேதமாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப்புலிகளின் முள்ளாமுனை காவல் அரணகள மீது வெள்ளை நிற கைஎஸ் வானில் வந்த இனந்தெரியாதோரால் மேற் கொளளப்பட்டதாக்குதலில் மூன்று விடுதலைப் புலிகள் வீரச்சா வடைந் துள்ளனர்.

## இராணுவ.....

கவும், இச்சம்பவங்கள் தொடர்பாக இராணுவத்துடன் கலந்து பேசுவதற்கு ஏற்பாடுகளை செய்து தருமாறும் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். (ம)

இவ்விரு தாக்குதல் சம்பவங்களும் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான வவுணதீவு ஊடாக வந்து இராணுவத்தினரின் உதவியுடன் நடததப்பட்டதாக நேரில் கண்ட பொது மக்கள் தெரவித்துள்ள தாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புலிகள் அறிவித் ததைத் தொடர்ந்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சம்பவ இடத்தை பார்வையிட்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

FREEDOM "L.M.L."
மோட்டார் சைக்கிள், ஸ்கூற்றர்
மேற்குறிப்பிட்ட நிறுவன பொறியியலாளர்கள் இந்தியாவிலிருந்து 28.04.2004 புதன்கிழமை 9 மணிக்கு வரவுள்ளார்கள்.
இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இவற்றின் பெறுபேறுகளை அறிந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
தொடர்பு கொள்ளவேண்டிய இடம்;
இ.ச. பேரம்பலம் சகக நிறுவனம்
50,52, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

இலங்கை வங்கி
அறிவித்தல்
30.04.2004 - வெள்ளிக்கிழமை - அரைநாள் விடுமுறை
வங்கி அலுவல்களுக்காக காலை
9.00 - 10.00 மணி வரை திறந்திருக்கும்.
07.05.2004 - வெள்ளிக்கிழமை - விசேட விடுமுறைதினம்
மேற்குறிப்பிட்ட அறிவித்தல்களை எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
உதவிப் பொதுமுகாமையாளர்
– வடபிராந்தியம்,
இலங்கை வங்கி
பொதுமுகாமையாளர் அலுவலகம்,
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.
(சி-7489)

தொழிற்பயிற்சிகள்
வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலை வாய்ப்பை பெறக்கூடியவாறு பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- Radio, T.V, VIDEO, DECK Repairing (காலம் 10 மாதங்கள்)
- Motor Rewinding and Electrical Wiring (காலம் 7 மாதங்கள்)
- Motor Cycle and Water Pump Mechanisam (காலம் 6 மாதங்கள்)
- Air Conditioning and Refrigeration (காலம் 7 மாதங்கள்)
- Diploma in Electrical & Electronic Technology (காலம் 12 மாதங்கள்)
- English Classes
I) Literature II) Language
By S. Theivathavapalan
புதிய பயிற்சிகள் ஆரம்பம்
03.05.2004 (கிழமை நாட்களில்)
02.05.2004 (சனி, ஞாயிறு நாட்களில்)
தனிப்பட்ட வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
மேலதிக விபரங்களுக்கு;
JAFFNA TECHNICAL INSTITUTE
DIRECTOR
NO, 367, நாவலர் வீதி,
இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்
T.P. 222 3335
கிளை:
இல. 07, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.